T. 14614

T14614
R005D05



# கலிங்கத்துப் பரணி

# கலிங்கத்துப் பரணி

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
**எஸ். ராஜம்**
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1
1960

# நூன்முகம்

பரணியாவது போர் பற்றிய பாடல். போரில் வெற்றி பெற்ற தலைவன் ஒருவன்மேல் பாடப்பெறுவது. போரை முதன்மையாக வைத்து, தலைவனைப் பற்றிய பிற செய்திகளையும் வெற்றிச் செயல்களையும் வெளிப்படுத்துவது. பாலை நிலம், காளி தேவி, பேய்கள், பற்றிய செய்திகள் இதில் விரிவாக இடம் பெறுகின்றன. கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, முதலிய பல பகுதிகளைக் கொண்டு இது விளங்குகிறது.

கலிங்கத்துப் பரணி முதற் குலோத்துங்க சோழன் ஆணைப்படி, அவன் தண்டத் தலைவனாகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டுடன் போரிட்டு வென்ற வரலாற்றைக் கூறுகிறது. இதனைப் பாடியவர் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார். 'பரணிக்கு ஓர் செயங்கொண்டான்' என இவரை ஆன்றோர் புகழ்ந்துள்ளனர். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தராலேயே பாராட்டப்பெற்ற பெருமையுடையது இந்தப் பரணி இலக்கியம். 'தென் தமிழ்த் தெய்வப் பரணி' என்றும், 'பாடற் பெரும் பரணி தேடற்கு அருங் கவி கவிச்சக்ரவர்த்தி பரவ' என்றும் புகழ்கின்றார் கூத்தர்.

கடை திறப்பு, காடு பாடியது, முதலிய பகுதிகளில் ஒரு சில பாடல்களைக் குறித்து முந்திய பதிப்பாசிரியர்களுக்குள் கருத்து வேற்றுமைகள் உள்ளன. யாவும் செயங்கொண்டார் வாக்கு என்றே ஆராய்ச்சிப் பெரும் புலவர் மு.இராகவையங்கார் முதலியோர் கருதுதலின், யாவும் நூலின் அங்கமாகவே கொள்ளப் பெற்றன. அங்கங்கே தரப்பெற்றுள்ள தலைப்புக்கள் புதியனவாகச் சேர்க்கப் பெற்றவை.

# 1. கடவுள் வாழ்த்து

உமாபதி

புயல்வண்ணன் புனல் வார்க்க, பூமிசையோன்
தொழில் காட்ட, புவன வாழ்க்கைச்
செயல்வண்ணம் நிலைநிறுத்த, மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தைசெய்வாம்— 1

'அரு மறையின் நெறி காட்ட, அயன் பயந்த
நிலமகளை, அண்டம் காக்கும்
உரிமையினின், கைப்பிடித்த உபய குலோத்-
தமன், அபயன், வாழ்க!' என்றே. 2

திருமால்

ஒரு வயிற்றும் பிறவாது பிறந்தருளி, உலகு ஒடுக்கும்
திரு வயிற்றது ஒரு குழவி திருநாமம் பரவுதுமே— 3

'அந் நெடுமால் உதரம்போல், அருள் அபயன் தனிக் கவிகை
இந் நெடு மா நிலம் அனைத்தும் பொதிந்து இனிது வாழ்க'! என்றே. 4

நான்முகன்

உகம் நான்கும், பொருள் நான்கும், உபநிடதம் ஒரு நான்கும்,
முகம் நான்கும், படைத்துடைய முதல்வனை யாம் பரவுதுமே— 5

'நிலம் நான்கும், திசை நான்கும் நெடுங் கடல்கள் ஒரு நான்கும்,
குலம் நான்கும், காத்து அளிக்கும் குலதீபன் வாழ்க!' என்றே. 6

சூரியன்

பேர் ஆழி உலகு அனைத்தும் பிறங்க, வளர் இருள் நீங்க,
ஓர் ஆழிதனை நடத்தும் ஒண் சுடரைப் பரவுதுமே— 7

'பனி ஆழி உலகு அனைத்தும் பரந்த கலி இருள் நீங்க,
தனி ஆழிதனை நடத்தும் சயதுங்கன் வாழ்க!' என்றே. 8

### கணபதி

காரண காரியங்களின் கட்டு அறுப்போர் யோகக்
கருத்து என்னும் தனித் தறியில் கட்ட, கட்டுண்டு,
ஆரணம் ஆம் நால் கூடத்து அணைந்து, நிற்கும்
ஐங் கரத்தது ஒரு களிற்றுக்கு அன்புசெய்வாம்— 9

'தனித்தனியே திசை யானை தறிகள் ஆக,
சயத் தம்பம் பல நாட்டி, ஒரு கூடத்தே
அனைத்து உலகும் கவித்ததெனக் கவித்துநிற்கும்
அருட் கவிகைக் கலிப் பகைஞன் வாழ்க!' என்றே. 10

### முருகவேள்

பொன் இரண்டு வரை தோற்கும் பொரு அரிய
நிறம் படைத்த புயமும், கண்ணும்,
பன்னிரண்டும் ஆறு-இரண்டும் படைத்துடையான்
அடித் தலங்கள் பணிதல்செய்வாம்— 11

'ஓர் இரண்டு திருக் குலமும் நிலைபெற வந்து,
ஒரு குடைக்கீழ்க் கடலும் திக்கும்
ஈர்-இரண்டு படைத்துடைய இரவி குலோத்-
தமன் அபயன் வாழ்க!' என்றே. 12

### நாமகள்

'பூமாதும் சயமாதும் பொலிந்து வாழும்
புயத்து இருப்ப, மிக உயரத்து இருப்பேம்' என்று,
நாமாது கருதினள்போல் நயந்து சென்னி
நாவகத்துள் இருப்பாளை நவிலுவாமே— 13

'எண் மடங்கு புகழ் மடந்தை, ''நல்லன் எம் கோன்;
யான் அவன்பால் இருப்பது நன்று!'' என்பாள் போல,
மண்மடந்தை, தன் சீர்த்தி வெள்ளை சாத்தி,
மகிழ்ந்த பிரான், வளவர் பிரான், வாழ்க!' என்றே. 14

## கொற்றவை

செய்ய திரு மேனி ஒரு பாதி கரிது ஆக,
தெய்வ முதல் நாயகனை எய்த சிலை மாரன்
கையின் மலர் பாதமலர்மீதும் அணுகா நம்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்— 15

‘கறுத்த செழியன் கழல் சிவப்ப வரை ஏறக்
கார்முகம் வளைத்து, உதியர் கோமகன் முடிக்கண்
பொறுத்த மலர் பாதமலர்மீது அணிய, நல்கும்
பூழியர்பிரான் அபயன் வாழ்க, இனிது!’ என்றே. 16

## சத்தமாதர்கள்

மேதி, புள், அலகை, தோகை, ஏறு, உவணம்,
வேழம், என்ற கொடி ஏழுடைச்
சோதி மென் கொடிகள் ஏழின் ஏழ்-இரு
துணைப் பதம் தொழ நினைத்துமே— 17

கேழல், மேழி, களிறு, ஆளி, வீணை, சிலை,
கெண்டை, என்று இனைய பல் கொடி
தாழ, மேருவில் உயர்த்த செம்பியர்
தனிப் புலிக் கொடி தழைக்கவே. 18

## வாழ்த்து

விதி மறையவர் தொழில் விளைகவே!
விளைதலின், முகில் மழை பொழிகவே!
நிதி தரு பயிர் வளம் நிறைகவே!
நிறைதலின், உயிர் நிலைபெறுகவே! 19

தலம் முதல் உள மனு வளர்கவே!
சயதரன் உயர் புலி வளர்கவே!
நிலவு உமிழ் கவிகையும் வளர்கவே!
நிதி பொழி கவி கையும் வளர்கவே! 20

## 2. கடை திறப்பு

சூது அளவு அளவு எனும் இள முலை,
துடி அளவு அளவு எனும் நுணுகு இடை,
காது அளவு அளவு எனும் மதர் விழி,
கடல் அமுது அனையவர்! திறமினோ! 1

புடைபட இள முலை வளர்தொறும்,
பொறை அறிவுடையரும் நிலை தளர்ந்து,
இடை படுவது பட அருளுவீர்!
இடு கதவு உயர் கடை திறமினோ! 2

சுரி குழல் அசைவுற அசைவுற,
துயிலெழும் மயில் என மயில் என,
பரிபுர ஒலி எழ ஒலி எழ,
பனி மொழியவர்! கடை திறமினோ! 3

கூடிய இன் கனவுஅதனிலே,
கொடை நரதுங்கனொடு அணைவுறுது,
ஊடிய நெஞ்சினொடு ஊடுவீர்!
உமது நெடுங் கடை திறமினோ! 4

'விடுமின், எங்கள் துகில் விடுமின்!' என்று முனி
வெகுளி மென் குதலை, 'துகிலினைப்
பிடிமின்' என்ற பொருள் விளைய நின்று, அருள்செய்
பெடைநலீர்! கடைகள் திறமினோ! 5

'எனது, அடங்க இனி வளவ துங்கன் அருள்'
என மகிழ்ந்து, இரவு கனவிடை,
தன தடங்கள் மிசை நகம் நடந்த குறி
தடவுவீர்! கடைகள் திறமினோ! 6

முனிபவர் ஒத்திலராய், முறுவல் விளைத்தலுமே,
'முகிழ் நகை பெற்றம்!' எனா, மகிழ்நர் மணித் துவர்வாய்
கனி பவளத்து அருகே வருதலும், முத்து உதிரும்
கயல்கள் இரண்டு உடையீர்! கடை திறமின், திறமின்! 7

'இத் துயில் மெய்த் துயிலே' என்று குறித்து, இளைஞோர்
இது புலவிக்கு மருந்து' என மனம் வைத்து, அடியில்
கைத்தலம் வைத்தலுமே, பொய்த் துயில் கூர் நயனக்
கடை திறவா மடவீர்! கடை திறமின், திறமின்! 8

இகல் இழந்து அரசர் தொழ வரும் பவனி
இரவு தந்தருளு கனவினில்,
பகல் இழந்த நிறை பெற முயன்று, மொழி
பதறு மாதர்! கடை திறமினோ! 9

முத்து வடம் சேர் முகிழ் முலைமேல்
முயங்கும் கொழுநர் மணிச் செவ் வாய்
வைத்த பவள வடம் புனைவீர்!
மணிப் பொன் கபாடம் திறமினோ! 10

தண் கொடை மானதன் மார்பு தோய்
தாதகி மாலையின்மேல் விழும்
கண்கொடு போம் வழி தேடுவீர்!
கனக நெடுங் கடை திறமினோ! 11

அஞ்சியே கயல் கெடக் கூடலில் பொருது சென்று,
அணி கடைக் குழையிலே விழ அடர்த்து எறிதலால்,
வஞ்சி மானதன் விடும் படையினின் கொடிய கண்
மடநலீர்! சுடர் மணிக் கடை திறந்திடுமினோ! 12

அவசமுற்று உளம் நெக, துயில் நெக, பவள வாய்
அணி சிவப்பு அற, விழிக்கடை சிவப்பு உற, நிறைக்
கவசம் அற்று இள நகைக் களிவர, களிவரும்
கணவரைப் புணருவீர்! கடை திறந்திடுமினோ! 13

கலவிக் களியின் மயக்கத்தே
கலை போய் அகல, கலை மதியின்
நிலவைத் துகில் என்று எடுத்து உடுப்பீர்!
நீள் பொன் கபாடம் திறமினோ! 14

நனவினில் சயதரன் புணரவே பெறினும், நீர்
நனவு எனத் தெளிவுருது, அதனையும் பழைய அக்
கனவு எனக் கூறுவீர், தோழிமார் நகை முகம்
கண்ட பின், தேறுவீர்! கடை திறந்திடுமினோ! 15

மெய்யே கொழுநர் பிழை நலிய,
வேட்கை நலிய, விடியளவும்,
பொய்யே உறங்கும் மட நல்லீர்!
புனை பொன் கபாடம் திறமினோ! 16

போக அமளிக் களி மயக்கின்
 புலர்ந்தது அறியாதே, கொழுநர்
ஆக-அமளிமிசைத் துயில்வீர்!
 அம் பொன் கபாடம் திறமினோ! 17

ஆளும் கொழுநர் வரவு பார்த்து,
 அவர்தம் வரவு காணாமல்,
தாளும் மனமும் புறம்பாகச்
 சாத்தும் கபாடம் திறமினோ! 18

உந்திச் சுழியின் முளைத்து எழுந்த
 உரோமப் பசுந் தாள் ஒன்றில் இரண்டு
அந்திக் கமலம் கொடுவருவீர்!
 அம் பொன் கபாடம் திறமினோ! 19

மீனம் புகு கொடி மீனவர் விழி அம்பு உக ஓடிக்
கானம் புக, வேளம் புகு மடவீர்! கடை திறமின்! 20

அலை நாடிய புனல் நாடுடை அபயற்கு இடு திறையாம்
மலை நாடியர்! துளு நாடியர்! மனையில் கடை திறமின்! 21

மழலைத் திரு மொழியில் சில வடுகும் சில தமிழும்
குழறித்தரு கருநாடியர்! குறுகிக் கடை திறமின்! 22

விலை இலாத வடம் முலையில் ஆட, விழி
 குழையில் ஆட, விழை கணவர் தோள்
மலையில் ஆடி வரு மயில்கள் போல வரும்
 மடநலீர்! கடைகள் திறமினோ! 23

தழுவும் கொழுநர் பிழை நலிய,
 'தழுவேல்!' என்ன, தழுவிய கை
வழுவ, உடனே மனம் குழைவீர்!
 மணிப் பொன் கபாடம் திறமினோ! 24

வேகம் விளைய வரும் கொழுநர்
 விழிகள் சிவந்த படி நோக்கி,
போகம் விளைய, நகைசெய்வீர்!
 புனை பொன் கபாடம் திறமினோ! 25

சொருகு கொந்தளகம் ஒரு கை மேல் அலைய,
ஒரு கை கீழ் அலைசெய் துகிலொடே,
திரு அனந்தலினும் முகம் மலர்ந்து வரு
தெரிவைமீர்! கடைகள் திறமினோ! 26

முலைமீது கொழுநர் கைந் நகம் மேவு குறியை,
முன் செல்வம் இல்லாத அவர் பெற்ற நிதிபோல்,
கலை மீது எடா, ஆரும் இல்லா இடத்தே
கண்ணுற்று, நெஞ்சம் களிப்பீர்கள்! திறமின்! 27

கடலில் விடம் என, அமுது என, மதனவேள்
கருதி வழிபடு படையொடு, கருதுவார்
உடலின் உயிரையும் உணர்வையும் நடுவு போய்
உருவும் மதர் விழி உடையவர்! திறமினோ! 28

முறுவல் மாலையொடு தரள மாலை, முக
மலரின் மீதும் முலை முகிழினும்,
சிறு நிலாவும் அதின் மிகு நிலாவும் என
வரும் நலீர்! கடைகள் திறமினோ! 29

முருகின் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆர் உயிரும்,
திருகிச் செருகும் குழல் மடவீர்!
செம் பொன் கபாடம் திறமினோ! 30

மெய்யில் அணைத்து உருகிப் பைய அகன்றவர்தாம்
மீள்வர் எனக் கருதிக் கூடல் விளைத்து, அறவே
கையில் அணைத்த மணல் கண் பனி சோர் புனலில்
கரைய விழுந்து அழுவீர் கடை திறமின், திறமின்! 31

செரு, இள நீர் பட, வெம் முலைச்
செவ் இளநீர், படு சேயரிக்
கருவிளம் நீர் பட, ஊடுவீர்!
கனக நெடுங் கடை திறமினோ! 32

அளக பாரம் மிசை அசைய, மேகலைகள்
அவிழ, ஆபரண வகை எலாம்
இளக, மா முலைகள் இணை அருமல் வரும்
இயல் நலீர்! கடைகள் திறமினோ! 33

மதுரமான மொழி பதற, வாள் விழி
சிவப்ப, வாய் இதழ் வெளுப்பவே,
அதர பானம் மதுபானம் ஆக, அறிவு
அழியும் மாதர்! கடை திறமினே! 34

தங்கு கண் வேல் செய்த புண்களைத்
தட முலை வேது கொண்டு ஒற்றியே,
செங் கனி வாய் மருந்து ஊட்டுவீர்!
செம் பொன் நெடுங் கடை திறமினே! 35

பொரும் கண் வேல் இளைஞர் மார்பின் ஊடுருவு
புண்கள் தீர, இரு கொங்கையின்
கருங் கண் வேது பட ஒற்றி, மென் கை கொடு
கட்டு மாதர்! கடை திறமினே! 36

'இடையின் நிலை அரிது; இறும், இறும்!' என எழா,
'எமது புகலிடம் இனி இலை' என விழா,
அடைய மதுகரம் எழுவது விழுவதாம்
அளக வனிதையர்! அணி கடை திறமினே! 37

'உபய தனம் அசையில், ஒடியும் இடை; நடையை
ஒழியும், ஒழியும்!' என ஒண் சிலம்பு,
'அபயம்! அபயம்!' என அலற, நடை பயிலும்
அரிவைமீர்! கடைகள் திறமினே! 38

பூ விரி மதுகரம் நுகரவும், பொரு கயல் இரு கரை புரளவும்,
காவிரி என வரும் மடநலீர்! கனக நெடுங் கடை திறமினே! 39

'களப வண்டல் இடு கலச கொங்கைகளில்
மதி எழுந்து கனல் சொரியும்' என்று,
அளக பந்திமிசை அளிகள் பந்தர் இடும்
அரிவைமீர்! கடைகள் திறமினே! 40

வாயின் சிவப்பை விழி வாங்க,
மலர்க் கண் வெளுப்பை வாய் வாங்க,
தோயக் கலவி-அமுது அளிப்பீர்!
துங்கக் கபாடம் திறமினே! 41

கூடும் இளம் பிறையில் குறு வெயர் முத்து உருள,
கொங்கை வடம் புரள, செங்கழுநீர் அளகக்
காடு குலைந்து அலைய, கை வளை பூசலிட,
கலவி விடா மடவீர்! கடை திறமின், திறமின்! 42

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர்! கழற் சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப் போர் பாட, கடை திறமின்! 43

இலங்கை எறிந்த கருணாகரன்தன்
இகல் வெஞ் சிலையின் வலி கேட்பீர்!
கலிங்கம் எறிந்த கருணாகரன்தன்
களப் போர் பாட, கடை திறமின்! 44

பேணும் கொழுநர் பிழைகள் எலாம்
பிரிந்த பொழுது நினைந்து, அவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்!
கன பொன் கபாடம் திறமினோ! 45

வாசம் ஆர் முலைகள் மார்பில் ஆட, மது
மாலை தாழ் குழலின் வண்டு எழுந்து
ஊசலாட, விழி பூசலாட, உறவு-
ஆடுவீர்! கடைகள் திறமினோ! 46

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளி உரைப்ப,
வாயைப் புதைக்கும் மடநல்லீர்!
மணிப் பொன் கபாடம் திறமினோ! 47

பொங்கு மதிக்கே தினம் நடுங்கி,
புகுந்த அறையை நிலவறை என்று,
அங்கும் இருக்கப் பயப்படுவீர்!
அம் பொன் கபாடம் திறமினோ! 48

வருவார் கொழுநர் எனத் திறந்தும்,
வாரார் கொழுநர் என அடைத்தும்,
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ! 49

ஊடுவீர், கொழுநர் தங்கள்பால்! முனிவு
ஒழிந்து கூடுதலின், உங்களைத்
தேடுவீர்! கடைகள் திறமினோ! இனிய
தெரிவைமீர்! கடைக்ள் திறமினோ! 50

பண்படு கிளவியை அமுது எனப்
பரவிய கொழுநனை நெறிசெய,
கண்கொடு கொலைசெய அருளுவீர்!
கனக நெடுங் கடை திறமினோ! 51

பிழை நினைந்து உருகி, அணைவுறு மகிழ்நர்
பிரிதல் அஞ்சி, விடு கண்கள் நீர்
மழை ததும்ப, விரல் தரையிலே எழுதும்
மடநலீர்! கடைகள் திறமினோ! 52

நக் காஞ்சிக்கும் வடமலைக்கும்
நடுவில் வெளிக்கே வேடனை விட்டு,
அக் கானகத்தே உயிர் பறிப்பீர்!
அம் பொன் கபாடம் திறமினோ! 53

செக்கச் சிவந்த கழுநீரும்,
செகத்தில் இளைஞர் ஆர் உயிரும்,
ஒக்கச் சொருகும் குழல் மடவீர்!
உம் பொன் கபாடம் திறமினோ! 54

# 3. காடு பாடியது

காளி தேவி உறையும் காடு

களப் போர் விளைந்த கலிங்கத்து,
கலிங்கர் நிணக் கூழ் களப் பேயின்
உளப்பு ஓர் இரண்டும் நிறைவித்தாள்
உறையும் காடு பாடுவாம்: 1

காட்டில் உள்ள மரங்கள்

பொரிந்த காரை, கரிந்த சூரை, புகைந்த வீரை, எரிந்த வேய்,
உரிந்த பாரை, எறிந்த பாலை, உலர்ந்த ஓமை,—கலந்தவே. 2

உதிர்ந்த வன்னி, ஒடுங்கு நெல்லி, உணங்கு தும்பை, உலர்ந்த வேல்,
பிதிர்ந்த சுள்ளி, சிதைந்த வெள்ளில், பிளந்த கள்ளி,—பரந்தவே. 3

வற்றல் வாகை, வறந்த கூகை, மடிந்த தேறு, பொடிந்த வேல்,
முற்றல் ஈகை, முளிந்த விண்டு, முரிந்த புன்கு,—நிரைந்தவே. 4

நிழல் அற்ற வெங் காட்டில் வாழும் பறவையும் விலங்கும்

தீய அக் கொடிய கானகத் தரை திறந்த வாய்தொறும் நுழைந்து, தன்
சாயை புக்க வழி யாது என, பரிதி தன் கரம்கொடு கிளேக்குமே. 5

ஆடுகின்ற சிறை வெம் பருந்தின் நிழல் அஞ்சி, அக் கடு வனத்தை விட்டு
ஓடுகின்ற நிழல் ஒக்கும்; நிற்கும் நிழல் ஓர் இடத்தும் உள அல்லவே. 6

'ஆதவம் பருகும்' என்று, நின்ற நிழல் அங்கு நின்று குடிபோனது—அப்
பாதவம் புனல் பெருது உணங்குவன, 'பருகும் நம்மை' என வெருவியே!

காட்டின் வெம்மை

செந் நெருப்பினேத் தகடு செய்து பார்
செய்தது ஒக்கும், அச் செந் தரைப் பரப்பு!
அந் நெருப்பினில் புகை திரண்டது ஒப்பு
அல்லது ஒப்புரு, அதனிடைப் புரு! 8

தீயின் வாயின் நீர் பெறினும் உண்பது ஓர்
சிந்தை கூர, வாய் வெந்து உலர்ந்து, செந்
நாயின் வாயின் நீர்தன்னே, நீர் எனு,
நவ்வி நாவினுல் நக்கி விக்குமே. 9

இந் நிலத்துளோர் ஏகலாவதற்கு
எளிய கானமோ?—அரிய வானுளோர்
அந் நிலத்தினில் வெம்மையைக் குறித்து
அல்லவோ, நிலத்து அடி இடாததே! 10

இரு பொழுதும் இரவி பசும் புரவி விசும்பு
இயங்காதது இயம்பக் கேண்மின்—
ஒரு பொழுதும் தரித்து அன்றி, ஊடு போக்கு
அரிது அணங்கின் காடு என்று அன்றே! 11

'காடு இதனேக் கடத்தும்' எனக் கரு முகிலும்
வெண் மதியும் கடக்க, அப்பால்
ஓடி இளேத்து உடல் வியர்த்த வியர்வு அன்றே,
உகு புனலும் பனியும்! அம்மா! 12

விம்மு கடு விசை வனத்தின் வெம்மையினைக்
குறித்து அன்ருே, விண்ணுேர் விண்ணின்
அம் முகடு முகில் திரை இட்டு, அமுத வட்டம்
ஆலவட்டம் எடுப்பது! அம்மா! 13

நிலம் புடைபேர்ந்து ஓடாமே, நெடு மோடி நிறுத்திய பேய்
புலம்பொடு நின்று உயிர்ப்பனபோல், புகைந்து, மரம் கரிந்துளவால். 14

வற்றிய பேய் வாய் உலர்ந்து வறள் நாக்கை நீட்டுவபோல்,
முற்றிய நீள் மரப் பொதும்பின் முது பாம்பு புறப்படுமால். 15

விழி சுழல வரு பேய்த்தேர் மிதந்து வரு நீர்; அந் நீர்ச்
சுழி சுழல வருவதென, சூறை வளி சுழன்றிடுமால், 16

காட்டில் கிடக்கும் பொருள்கள்

சிதைந்த உடல் சுடு சுடலைப் பொடியைச் சூறை
சீத்தடிப்ப, சிதறிய அப் பொடியால், செம்மை
புதைந்த மணி புகை போர்த்த தழலே போலும்!
போலாவேல், பொடி மூடும் தணலே போலும்! 17

மண் ஓடி, அற வறந்து, துறந்து, அங்காந்த
வாய் வழியே வேய் பொழியும் முத்தம், அவ் வேய்
கண் ஓடிச் சொரிகின்ற கண்ணீர்! அன்றேல்,
கண்டு இரங்கிச் சொரிகின்ற கண்ணீர் போலும்! 18

வெடித்த கழை விசைத்து எறிந்த முத்தம் மண்மேல்
வீழ்ந்தன, அத் தரை புழுங்கி அழன்று, மெய்ம்மேல்
பொடித்த வியர்ப் புள்ளிகளே போலும் போலும்!
போலாவேல், கொப்புளங்கள் போலும் போலும்! 19

பல் கால் திண் திரைக் கரங்கள் கரையின் மேன்மேல்
பாய் கடல்கள் நூக்குமது, அப் படர் வெங் கானில்
செல் காற்று வாராமல் காக்க அன்ருே!
திசைக் கரியின் செவிக் காற்றும் அதற்கே அன்ருே! 20

முள் ஆறும் கல் ஆறும் தென்னர் ஓட,
முன் ஒரு நாள், வாள் அபயன் முனிந்த போரின்,
வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட,
வெந்த வனம் இந்த வனம் ஒக்கில் ஒக்கும்! 21

அணிகொண்ட குரங்குஇனங்கள், அலை கடலுக்கு அப் பாலை
மணல் ஒன்று காணுமல், வரை எடுத்து மயங்கினவே! 22

# 4. கோயில் பாடியது

தேவி வாழ் கோயிலின் அமைப்பு

ஓதி வந்த அக் கொடிய கானகத்து
உறை அணங்கினுக்கு அயன் வகுத்த இப்
பூதலம் பழங் கோயில் என்னினும்,
புதிய கோயில் உண்டு, அது விளம்புவாம்: 1

வட்ட வெண்குடைச் சென்னி மானதன்
வாளின் வாயினுல் மறலி வாயிடைப்
பட்ட மன்னர்தம் பட்ட மங்கைமார்
பரு மணித் திருக் கரு இருத்தியே, 2

துவர் நிறக் களிற்று உதியர் ஏவலின்,
சுரிகை போர்முகத்து உருவ, நேர் எதிர்த்து,
அவர் நிணத்தொடு அக் குருதி நீர் குழைத்து,
அவர் கருந் தலைச் சுவர் அடுக்கியே, 3

அறிஞர் தம்பிரான் அபயன் வாரணம்
அரசர் மண்டலத்து அரண் அறப் பறித்து
எறிதரும் பெருங் கணைமரங்கள் கொண்டு,
எழுது தூணெடு உத்தரம் இயற்றியே, 4

கடிது அழிந்து, போர் மிதிலையில் படும்
கரி மருப்பினைத் திரள் துலாம் எனும்-
படி பரப்பி, அப் பரும யானையின்
பழு எலும்பினில் பா அடுக்கியே, 5

மீளி மா உகைத்து அபயன் முன் ஓர் நாள்,
விருத ராசரைப் பொருது கொண்ட போர்,
ஆளி, வாரணம், கேழல், சீயம், என்று
அவை நிரைத்து, நாசிகை இருத்தியே, 6

துங்கபத்திரைச் செங்களத்திடை,
சோளசேகரன் வாள் எறிந்த போர்,
வெங் கதக் களிற்றின் படத்திஞல்
வெளி அடங்கவே மிசை கவித்துமே. 7

கொள்ளி வாய்ப் பேய் காக்கும் கோபுரமும் நெடு மதிலும்,
வெள்ளியால் சமைத்தனபோல், வெள் எலும்பினுல் சமைத்தே, 8

கார் இரும்பின், மகர தோரணமாகக் கரும் பேய்கள்,
ஓர் இரண்டு கால் நாட்டி, ஓர் இரும்பை மிசை வளைத்தே, 9

மயில் கழுத்தும், கழுத்து அரிய மலர்ந்த முகத்
  தாமரையும் மருங்கு சூழ்ந்த
எயிற்கு அழுத்தும் நிணக் கொடியும், இளங் குழவிப்
  பசுந் தலையும், எங்கும் தூக்கி, 10

பணியாத வழுதியர்தம் பாய் களிற்றின்
  செவிச் சுளகு பலவும் தூக்கி,
மணி ஊசல் என மதுரை மகர தோ-
  ரணம் பறித்து, மறித்து நாட்டி, 11

தேவியை வழிபடுவோர்

பரிவிருத்தி அலகிட்டு, பசுங் குருதி
  நீர் தெளித்து, நிணப் பூச் சிந்தி,
எரி விரித்த ஈம விளக்கு எம் மருங்கும்
  ஏற்றியது ஓர் இயல்பிற்றுலோ. 12

சலியாத தனி ஆண்மைத் தறுகண் வீரர்,
  'தருக வரம்! வரத்தினுக்குத் தக்கதாகப்
பலி ஆக உறுப்பு அரிந்து தருதும்!' என்று,
  பரவும் ஒலி கடல் ஒலிபோல் பரக்குமாலோ. 13

தேவிக்குப் பலி கொடுத்து வழிபடும் காட்சி

சொல்ல அரிய ஓமத் தீ வளர்ப்பராலோ;
  தொழுதிருந்து பழு எலும்பு தொடர வாங்கி,
வல் எரியின் விறகு ஆக இடுவராலோ;
  வழி குருதி நெய் ஆக வார்ப்பராலோ. 14

அடிக் கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ;
  அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ;
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ;
  குறை உடலம் கும்பிட்டு நிற்குமாலோ. 15

நீண்ட பலி பீடத்தில் அறுத்து வைத்த
நெறி குஞ்சிச் சிரத்தைத் தன் இனம் என்று எண்ணி,
ஆண்டலைப்புள் அருகு அணைந்து பார்க்குமாலோ;
அணைதலும், அச் சிரம் அச்சமுறுத்துமாலோ. 16

'கடன் அமைந்தது, கருந் தலை அரிந்த பொழுதே;
கடவது ஒன்றும் இலை' என்று, விளையாடும் உடலே;
உடல் விழுந்திடின், நுகர்ந்திட உவந்த சில பேய்
உறு பெரும் பசி உடன்றிட, உடன் திரியுமே. 17

'பகடு இடந்து கொள் பசுங் குருதி இன்று, தலைவீ!
பலி கொள்' என்ற குரல் எண் திசை பிளந்து, மிசை வான்
முகடு இடந்து உரும் எறிந்தென முழங்க, உடனே
மொகுமொகென்று ஒலி மிகும் தமருகங்கள் பலவே. 18

சாதகரும் யோகினியரும்

தமருகங்கள் தருகின்ற சதியின்கண் வருவார்,
அமரி இன்புறும் அநாதி வரு சாதகர்களே. 19

படை வலங்கொடு, பசுந் தலை இடங்கொடு, அணைவார்—
உடை ஒழிந்து, இடை நுடங்க, வரு யோகினிகளே. 20

பேய்கள்

வீங்கு தலை நெடுங் கழையின் மிசைதோறும்
திசைதோறும் விழித்து நின்று
தூங்கு தலை சிரிப்பன கண்டு, உறங்குதலை
மறந்திருக்கும், சுழல் கண் சூர்ப் பேய். 21

அரிந்த தலை உடன் அமர்ந்தே ஆடு கழை,
அலை குருதிப் புனலில் மூழ்கி
இருந்த உடல் கொள, காலன் இடுகின்ற
நெடுந் தூண்டில் என்னத் தோன்றும். 22

கொல் வாய் ஓரி முழவு ஆக, கொள்ளி வாய்ப் பேய், குழவிக்கு
நல் வாய்ச் செய்ய தசை தேடி, நரி வாய்த் தசையைப் பறிக்குமால். 23

கோயிலைச் சூழ்ந்துள்ள சுடலை

நிணமும் தசையும் பருந்து இசிப்ப, நெருப்பும், பருத்தியும், பொன்று
பிணமும், பேயும், சுடுகாடும், பிணங்கு நரியும், உடைத்தரோ! 24

# 5. தேவியைப் பாடியது

## தேவியின் திருமேனி அழகு

உவை உவை உள என்று எண்ணி உரைப்பது என்? உரைக்க வந்த
அவை அவை மகிழ்ந்த மோடி அவயவம் விளம்பல் செய்வாம்: 1

ஒரு மலை மத்து வலத்து உலவு கயிற்றினும், மற்று
உலகு பரித்த பணத்து உரக வடத்தினும், அப்
பரு மணி முத்து நிரைத்து, உடு மணி தைத்த இணைப்
பரிபுரம் வைத்த தளிர்ப் பத யுகளத்தினளே. 2

அரவொடு திக்கயம் அப்பொழுது பரித்த இடத்து,
அடி இட, உள் குழிவுற்று அசைவுறும் அப் பொழுதில்,
தரணி தரித்ததெனப் பரணி பரித்த புகழ்ச்
சயதரனைப் பரவி, சதிகொள் நடத்தினளே. 3

பரிவு அகலத் தழுவிப் புணர் கலவிக்கு உருகி,
படர் சடை முக் கணுடைப் பரமர் கொடுத்த களிற்று
உரிமிசை, அக் கரியின் குடரொடு கட்செவி இட்டு,
ஒரு புரி இட்டு இறுகப் புனையும் உடுக்கையளே. 4

கலை வளர் உத்தமனை, கரு முகில் ஒப்பவனை,
கரட தடக் கடவுள் கனக நிறத்தவனை,
சிலை வளைவித்து அவுணத் தொகை செக விட்ட அயில்-
திறலவனை, தரும் அத் திரு உதரத்தினளே. 5

தணி தவளப் பிறையைச் சடைமிசை வைத்த விடைத்
தலைவர் வனத்தினிடைத் தனி நுகர்தற்கு நினைத்து,
அணி தவளப் பொடி இட்டு அடைய, இலச்சினை இட்டு,
அமுதம் இருத்திய செப்பு அனைய தனத்தினளே. 6

கவள மதக் கரடக் கரி உரிவைக் கயிலைக்
களிறு விருப்புறும் அக் கனக முலைத் தரளத்
தவள வடத்தினிடை, பவளமொடு ஒத்து எரிய,
தழல் உமிழ் உத்தரியத் தனி உரகத்தினளே. 7

அரியும் மிடற்று அலை இட்டு அலை குருதிக்கு எதிர் வைத்து,
அறவும் மடுத்த சிவப்புஅதனை, முழுத் திசையின்
கரி கரடத் தொளையின் கலுழியிடைக் கழுவி,
கருமை படைத்த சுடர்க் கர கமலத்தினளே. 8

சிமைய வரைக் கனகத் திரள் உருக, பரவைத்
திரை சுவறிப் புகைய, திசை சுடும் அப்பொழுதத்து,
இமையவரைத் தகைதற்கு, இருளும் மிடற்று இறைவற்கு
இனிய தரத்து அமுதக் கனி அதரத்தினளே. 9

உருகு தலைத்தொடையற்கு உவமை உறச் சுழல்வுற்று
உலவு விழிக்கடை பட்டு உடல் பகையற்று ஒழிய,
திருகு தலைக் கிளவிச் சிறு குதலைப் பவளச்
சிறு முறுவல் தரளத் திரு வதனத்தினளே. 10

அரு மறை ஒத்து உலகத்து அருள் நெறி உய்த்த குணத்து,
அபயன் உதித்த குலத்து, உபய குலத்து முதல்
திரு மதி ஒக்கும் என, தினகரன் ஒக்கும் என,
திகழ் வதனத்தினிடைத் திலக வனப்பினளே. 11

அண்டம் உறு குல கிரிகள், அவள் ஒருகால், இரு காதில்
கொண்டு அணியின், குதம்பையுமாம்; கோத்து அணியின், மணி வடமாம்.

கைம் மலர்மேல் அம்மனை ஆம், கந்துகம் ஆம்,கழங்கும் ஆம்,
அம் மலைகள்; அவள் வேண்டின், ஆகாதது ஒன்று உண்டோ? 13

ஓங்காரத்து உட் பொருளாய் ஒருவாது நடந்தானை
நீங்காமல் நின்றானை எவ் வண்ணம் நிகழ்த்துவாம்! 14

## 6. பேய்களைப் பாடியது

தேவியைச் சூழ்ந்துள்ள அணுக்கப் பேய்களின் தன்மை

எவ் அணங்கும் அடி வணங்க, இப் பெருமை படைத்துடைய
அவ் அணங்கை அகலாத அலகைகளை இனிப் பகர்வாம்: 1

பெரு நெடும் பசி பெய் கலம் ஆவன;
பிற்றைநாள் முனை நாளின் மெலிவன;
கரு நெடும் பனங் காடு முழுமையும்
காலும் கையும் உடையன போல்வன; 2

வன் பிலத்தொடு வாது செய் வாயின;
வாயினால் நிறையாத வயிற்றின;
முன்பு இருக்கின், முகத்தினும் மேல் செல,
மும் முழம்படும் அம் முழந்தாளின; 3

வெற்றெலும்பை நரம்பின் வலித்து, மேல்
வேய்ந்திலா இறப்பு ஏய்ந்த உடம்பின;
'கொற்று இலம்; பெறு கூழ் இலம்; எங்களைக்
கொள்வதே பணி!' என்று குரைப்பன; 4

உள் ஒடுங்கி இரண்டும் ஒன்றாகவே
ஒட்டி ஒட்டு விடாத கொடிற்றின;
கொள்ளிகொண்டு இரண்டு ஏ முழையுள் புகின்,
குன்று தோன்றுவ போல விழிப்பன; 5

வற்றலாக உலர்ந்த முதுகுகள்
மரக்கலத்தின் மறி புறம் ஒப்பன;
ஒற்றை வான் தொளைப் புற்று எனப் பாம்புடன்
உடும்பும் உள் புக்கு உறங்கிடும் உந்திய; 6

பாந்தள் நால்வன போலும் முடை மயிர்
பாசி பட்ட பழந் தொளை, மூக்கின;
ஆந்தை பாந்தி இருப்ப, துரிஞ்சில் புக்கு,
அங்கும் இங்கும் உலாவு செவியன; 7

கொட்டும் மேழியும் கோத்தன பல்லின;
கோம்பி பாம்பிடைக் கோத்து அணி தாலிய;
தட்டி வானைத் தகர்க்கும் தலையின;
தாழ்ந்து மார்பிடைத் தட்டும் உதட்டின; 8

அட்டம் இட்ட நெடுங் கழை காணில், 'என்
அன்னை! அன்னை!' என்று ஆலும் குழவிய;
ஒட்டல் ஒட்டகம் காணில், 'என் பிள்ளையை
ஒக்கும், ஒக்கும்!' என்று ஒக்கலை கொள்வன; 9

புயல் அளிப்பதன் மேலும் அளித்திடும்
பொன் கரத்து அபயன் புலி பின் செல,
கயல் ஒளித்த கடுஞ் சுரம்போல், அகம்
காந்து வெம் பசியின் புறம் தீந்தவும்;— 10

'துஞ்சலுக்கு அணித்தாம்' என, முன்னமே
சொன்ன சொன்ன துறைதொறும், பேய் எலாம்
அஞ்சலித்து, ஒருகால் அகலாமல், அவ்
அணங்கினுக்கு அருகாக இருக்கவே— 11

## முடம், குருடு, ஊமை முதலிய குறைபட்ட பேய்கள்

ஆனைச் சீறு களிற்று அபயன் பொரும்
அக் களத்தில், அரசர் சிரம் சொரி
மூளைச் சேற்றில் வழுக்கி விழுந்திட,
மொழி பெயர்ந்து, ஒரு கால் முடம் ஆனவும்; 12

அந்த நாள், அக் களத்து அடு கூழினுக்கு
ஆய்ந்த வெண் பல் அரிசி உரல் புக
உந்து போதினில், போதகக் கொம்பு எனும்
உலக்கை பட்டு, வலக்கை சொத்து ஆனவும்; 13

விருத ராச பயங்கரன், முன் ஓர் நாள்,
வென்ற சக்கரக் கோட்டத்திடை, கொழுங்
குருதியும் குடரும் கலந்து அட்ட வெங்
கூழ் தெறித்து, ஒரு கண் குருடு ஆனவும்; 14

வண்டல் பாய் பொன்னி நாடனை வாழ்த்தி, மா
மதுரை வெங் களத்தே, மதுரிக்க அட்டு
உண்ட கூழொடு நாவும் சுருண்டு புக்கு
உள் விழுந்து, அற ஊமைகள் ஆனவும்; 15

ஆனை சாய, அடு பரி ஒன்று உகைத்து,
ஐம்படைப் பருவத்து அபயன் பொரும்,
சேனை வீரர் நின்று ஆர்த்திடும் ஆர்ப்பினில்,
திமிரி வெங் களத்தில், செவிடு ஆனவும்; 16

பண்டு தென்னவர் சாய, அதற்கு முன்
பணி செய் பூத கணங்கள் அனைத்தையும்
கொண்டு வந்த பேய் கூடிய போதில், அக்
குமரி மாதர் பெற, குறள் ஆனவும்; 17

பரக்கும் ஓதக் கடாரம் அழித்த நாள்,
பாய்ந்த செம் புனல் ஆடியும் நீந்தியும்,
குரக்கு வாதம் பிடித்து வலித்து, அறக்
குடி அடங்கலும் கூன் முதுகு ஆனவும்; 18

சிங்களத்தொடு தென் மதுராபுரி
செற்ற கொற்றவன் வெற்றி கொள் காலையே,
வெங் களத்தில் அடு மடைப் பேய்க் குலம்
வேலை புக்கு விரல்கள் தறிந்தவும்;— 19

# 7. இந்திரசாலம்

இருபாலும் பேய்கள் தொழுது இருக்க, இடாகினிகள் ஈச்சோப்பி
பணிமாற, பஞ்ச சயனத்தின்மேல் தேவி வீற்றிருத்தல்

இவ் வண்ணத்து இரு புறமும் தொழுதிருப்ப,
எலும்பின்மிசைக் குடர் மென் கச்சின்
செவ் வண்ணக் குருதி தோய் சிறு பூதத்
தீபக் கால் கட்டில் இட்டே, 1

பிண மெத்தை அஞ்சு அடுக்கி, பேய் அணையை
முறித்திட்டு, தூய வெள்ளை
நிண மெத்தை விரித்து, உயர்ந்த நிலாத் திகழும்
பஞ்ச சயனத்தின் மேலே, 2

கெடாதபடி கெடும் செழியர் கெடும் பொழுதின்,
இடும் பிண்டிபாலம் ஏந்தி,
இடாகினிகள் இரு மருங்கும் ஈச்சோப்பி
பணிமாற, இருந்த போழ்தில்— 3

நெடும் பேய் முது பேயின் வருகையைத் தேவிக்குத் தெரிவித்தல்

அடல் நாக எலும்பு எடுத்து நரம்பில் கட்டி,
அடித் தடியும் பிடித்து, அமரின் மடிந்த வீரர்
குடர் சூடி, நிணச் சட்டை இட்டு, நின்ற
கோயில் நாயக நெடும் பேய் கும்பிட்டு, ஆங்கே, 4

'சுரகுருவின் தூது ஆகி, யமன்பால் செல்வோன்
துணித்து வைத்த சிரம் அன்று தின்ற பேயைச்
சிரம் அரிய, அதற்கு உறவாய் ஒளித்துப் போந்த
சில பேயைத் திருவுள்ளத்து அறிதி அன்றே! 5

'அப் பேயின் ஒரு முது பேய் வந்து நின்று, இங்கு,
''அடியேனை விண்ணப்பம் செய்க!'' என்றது;
இப் பேய் இங்கு ஒரு தீங்கும் செய்தது இல்லை;
என் கொலோ திருவுள்ளம்?' என்னக் கேட்டே, 6

### தேவி பணியால் நெடும் பேய் முது பேயை அழைத்துவர, அது தேவியைப் பிழை பொறுக்க வேண்டுதல்

'அழைக்க!' என்றலும், அழைக்க வந்து, அணுகி,
அஞ்சி அஞ்சி, 'உனது ஆணையின்
பிழைக்க வந்தனம்; பொறுத்து எமக்கு அருள்செய்;
பெண் அணங்கு!' என வணங்கவே, 7

### முது பேயின் பிழையைத் தேவி பொறுத்தல்

'அருத்தியின் பிழை நினைத்த கூளியை
அறுத்து, அவன் தலை அவன் பெறப்
பொருத்தி, அப் பிழை பொறுத்தனம்; பிழை
பொருதது இல்லை, இனி' என்னவே, 8

### முது பேய் தான் கற்று வந்துள்ள இந்திரசால வித்தையைக் காணுமாறு தேவியை இறைஞ்சி வேண்டி, வித்தை காட்டுதல்

'உய்ந்து போயினம், உவந்து எமக்கு அருள;
ஒன்றொடு ஒப்பன ஓர் ஆயிரம்
இந்த்ர சாலம் உள கற்று வந்தனென்;
இருந்து காண்!' என இறைஞ்சியே, 9

'ஏற நின் இரு திருக்கண் வைத்து அருள்செய்!
இக் கையில் சில துதிக்கை பார்!
மாறி இக் கையில் அழைக்க, மற்றவை
மதக் கரித் தலைகள் ஆன பார்! 10

'இக் கரித் தலையின் வாயினின்று உதிர
நீர் குடித்து, உரும் இடித்தெனக்
கொக்கரித்து அலகை சுற்ற, மற்று இவை
குறைத் தலைப் பிணம் மிதப்ப பார்! 11

'அடக்கம் அன்று; இது கிடக்க: எம்முடைய
அம்மை! வாழ்க! என வெம்மை பார்!
கடக்கம் அன்று அபயன் வென்று வென்றி கொள்
களப் பெரும் பரணி இன்று பார்! 12

'துஞ்சி வீழ் துரக ராசி பார்! உடல்
துணிந்து வீழ் குறை துடிப்ப பார்!
அஞ்சி ஓடும் மத யானை பார்! உதிர
ஆறும் ஓடுவன நூறு பார்! 13

'அற்ற தோள் இவை அலைப்ப பார்! உவை,
அறுத நீள் குடர் மிதப்ப பார்!
இற்ற தாள் நரி இழுப்ப பார்! அடி
இழுக்கும் மூளையில் வழுக்கல் பார்! 14

'நிணங்கள் பார்! நிண மணம் கனிந்தன
நிலங்கள் பார்! நிலம் அடங்கலும்
பிணங்கள் பார்! இவை கிடக்க, நம்முடைய
பேய் அலாத சில பேய்கள் பார்!' 15

முது பேய் காட்டிய போர்க்காட்சியை மெய் என எண்ணி ஏமாந்த
பேய்களின் செயல்

என்ற போதில், 'இவை மெய்' எனு, உடன்
இருந்த பேய் பதறி, ஒன்றன்மேல்
ஒன்று, கால் முறிய மேல் விழுந்து, அடிசில்
உண்ண எண்ணி, வெறும் மண்ணின்மேல், 16

விழுந்து, 'கொழுங் குருதிப் புனல்' என்று, வெறுங் கை முகந்து முகந்து,
எழுந்து, 'விழும் தசை' என்று, நிலத்தை இருந்து துழாவிடுமே. 17

'சுற்ற, நிணத் துகில் பெற்றனம்!' என்று, சுலாவு வெறுங் கையவே;
'அற்ற குறைத் தலை!' என்று, விசும்பை அதுக்கும் எயிற்றினவே; 18

கயிற்று உறி ஒப்பது ஓர் பேய் வறிதே உடல் கௌவினது; ஒக்க விரைந்து,
எயிற்றை அதுக்கி, நிலத்திடை பேய்கள் நிரைத்தன, மேல் விழவே. 19

முறம் பல போல நகங்கள் முறிந்து, முகம் சிதறு, முதுகும்
திறம்பல் இலா விறல் யோகினி மாதர் சிரித்து விலா இறவே, 20

சால வித்தையை நிறுத்துமாறு செய்யப் பேய்கள் தேவியை
வேண்டுதலும், முது பேய், 'என் கல்வி முற்றும் கண்டருள்!' எனலும்

அக் கணம், ஆளும் அணங்கினை வந்தனை செய்து, 'கணங்கள் எலாம்
இக் கணம் மாளும்; இனித் தவிர் விச்சை!' எனக் கை விதிர்த்தலுமே,

'கொற்றவர் கோன் வாள் அபயன் அறிய, வாழும்
குவலயத்தோர் கலை அனைத்தும் கூற, ஆங்கே,
கற்று வந்தார் கற்ற அவன் காணுமாபோல்,
கடைபோகக் கண்டருள், என் கல்வி!' என்றே, 22

முது பேயைப் பேய்கள் தடுக்க வேண்ட, தேவியும், 'தவிர்' என்று கூறி, 'இவ் வித்தைகளை எங்குக் கற்றாய்?' என விஞவுதல்

வணங்குதலும், கணங்கள் எலாம், 'மாயப் பாவி!
மறித்து எம்மை மறு சூடு சுடுவை ஆகில்,
அணங்கரசின் ஆணை!' என, அணங்கும், 'இப்போது
அவை தவிர்; எங்கு இவை கற்றாய்?' என்ன, ஆங்கே— 23

'நின் முனிவும், சுரகுருவின் முனிவும் அஞ்சி,
''நிலை அரிது'' என்று, இமகிரி புக்கு இருந்தேற்கு, ஔவை-
தன் முனிவும் அவன் முனிவும் தவிர்க!' என்று
சாதன மந்திர விச்சை பலவும் தந்தே, 24

'உன்னுடைய பழ அடியார் அடியாள், தெய்வ
உருத்திர யோகினி என்பாள், உனக்கு நன்மை
இன்னம் உள கிடைப்பன இங்கு இருக்க!' என்ன
யான் இருந்தேன் சில காலம்; இருந்த நாளில்— 25

## 8. இராசபாரம்பரியம்

பேய் குலோத்துங்கனது முன்னோர் பெருமை கூறத் தொடங்குதல்

'செண்டு கொண்டு கரிகாலன் ஒரு காலின் இமயச்
சிமய மால் வரை திரித்தருளி, மீள அதனை,
''பண்டு நின்றபடி நிற்க இது!'' என்று, முதுகில்
பாய் புலிக் குறி பொறித்து, அது மறித்த பொழுதே, 1

கரிகாலன் மேருவில் புலிக்கொடி பொறித்த பொழுது, அவன் எதிரில் நாரதர் வந்து சொன்னது

'காலம் மும்மையும் உணர்ந்தருளும் நாரதன் எனும்
கடவுள் வேத முனி வந்து, ''கடல் சூழ் புவியில் நின்
போலும் மன்னர் உளரல்லர்'' என ஆசி புகலா,
''புகல்வது ஒன்று உளது கேள்: அரச!'' என்று புகல்வான்: 2

'''பண்டு பாரதம் எனும் கதை பராசரன் மகன்
பகர, வெங் கரிமுகன் பரு மருப்பை ஒரு கைக்
கொண்டு, மேரு சிகரத்து ஒரு புறத்தில் எழுத,
குவலயம் பெறு தவப் பயன் உரைப்ப அரிதால்! 3

'''பாரதத்தின் உளவாகிய பவித்ர கதை, எம்
பரமன் நல் சரிதை மெய்ப் பழைய நான் மறைகளே;
நேர் அதற்கு இதனை நான் மொழிய, நீ எழுது, முன்
நெடிய குன்றின்மிசையே; இசைவதான கதை கேள்: 4

'''அதன் முதற்கண் வரும் ஆதி முதல் மாயன் இவனே
அப்ரமேயம் எனும் மெய்; ப்ரியமதாக, உடனே,
பதமும், இப் பதம் வகுக்க வரு பாதம் அதுவும்,
பாதமான சில பார் புகழ வந்த அவையும், 5

'''அந்தம் உட்பட இருக்கும் அவ் இருக்கின் வழியே
ஆகி வந்த அவ் வருக்கமும், வருக்கம் முழுதும்
வந்த அட்டகமும், ஒட்டு அரிய சங்கிதைகளும்,
வாய்மை வேதியர்கள்தாம் விதி எனும் வகையுமே, 6

'''கமல யோனி முதலாக வரும் உங்கள் மரபில்
காவல் மன்னவர்கள் ஆகி வருகின்ற முறையால்,
அமல வேதம் இதுதானும்; இதில் ஆரண நிலத்து
அமலனே அபயன் ஆக அறிக!'' என்று அருளியே, 7

'அரணி வேள்வியில் அகப்படும் அகண்ட உருவாய்
அரவு-அணைத் துயிலும் ஆதி முதலாக, அபயன்
தரணி காவல் அளவும் செல மொழிந்து, முனிவன்-
தான் எழுந்தருள, மா முனி மொழிந்தபடியே, 8

'ஆதி மால் அமல நாபி கமலத்து அயன் உதித்து,
அவன் மரீசி எனும் அண்ணலை அளித்த பரிசும்;
காதல் கூர்தரு மரீசி மகன் ஆகி வளரும்
காசிபன் கதிர் அருக்கனை அளித்த பரிசும்; 9

'அவ் அருக்கன் மகன் ஆகி, மனு மேதினி புரந்து,
அரிய காதலனை ஆவினது கன்று நிகர் என்று
எவ் வருக்கமும் வியப்ப, முறை செய்த கதையும்;
இக்குவாகு இவன் மைந்தன் என வந்த பரிசும்; 10

'இக்குவாகுவின் மகன் புதல்வன் ஆன உரவோன்,
இகலுவோன், இகல் உரம் செய்து, புரந்தரன் எனும்
சக்கு ஆயிரமுடைக் களிறு வாகனம் எனத்
தான் இருந்து, பொரு தானவரை வென்ற சயமும்; **11**

'ஒரு துறைப் புனல் சினப் புலியும் மானும் உடனே
உண்ண வைத்த உரவோன் உலகில் வைத்த அருளும்;
பொரு துறைத்தலை புகுந்து முசுகுந்தன், இமையோர்
புரம் அடங்கலும் அரண் செய்து, புரந்த புகழும்; **12**

'கடல் கலக்க எழும் இன் அமுதுதன்னை ஒருவன்,
கடவுள் வானவர்கள் உண்ண, அருள்செய்த கதையும்;
உடல் கலக்கு அற அரிந்து தசை இட்டும், ஒருவன்
ஒரு துலைப் புறவொடு ஒக்க நிறை புக்க புகழும்; **13**

'சுராதிராசன் முதலாக வரு சோழன் முனம் நாள்,
சோழமண்டலம் அமைத்த பிறகு, ஏழ் உலகையும்
இராச கேசரி புரந்து, பரகேசரிகளாம்
இருவர் ஆணை புலி ஆணை என நின்ற புகழும்; **14**

'காலனுக்கு, ''இது வழக்கு'' என உரைத்த அவனும்,
காவிரிப் புனல் கொணர்ந்த அவனும், புவனியின்
மேல் அனைத்து உயிரும் வீவது இலையாக நமன்மேல்
வென்றி கொண்டவனும், என்று இவர்கள் கொண்ட விறலும்; **15**

'புலி எனக் கொடியில் இந்திரனை வைத்த அவனும்;
புணரி ஒன்றினிடை ஒன்று புக விட்ட அவனும்;
''வலியினில் குருதி உண்க'' என அளித்த அவனும்;
வாதராசனை வலிந்து பணிகொண்ட அவனும்; **16**

'தூங்கு மூன்று எயில் எறிந்த அவனும்; திரள் மணிச்
சுடர் விமானமது வானமிசை ஊர்ந்த அவனும்;
தாங்கள் பாரதம் முடிப்பளவும் நின்று தருமன்-
தன் கடல் படைதனக்கு உதவி செய்த அவனும்; **17**

'தளவு அழிக்கும் நகை வேல்விழி, பிலத்தின் வழியே
தனி நடந்து, உரகர்தங்கள் மணி கொண்ட அவனும்;
களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய, உதியன்
கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட அவனும்;— **18**

### கரிகாலன் பெருமை

'என்று மற்று இவர்கள் தங்கள் சரிதங்கள் பலவும்
எழுதி, மீள இதன்மேல் வழுதி சேரன் மடிய,
தன் தனிக் களிறு அணைந்தருளி, வீரமகள் தன்
தன தடங்களொடு தன் புயம் அணைந்த பரிசும்; 19

' ''தொழுது மன்னரே கரை செய் பொன்னியில்
தொடர வந்திலா முகரியைப் படத்து
எழுதுக!'' என்று கண்டு, ''இது மிகைக் கண்'' என்று,
இங்கு அழிக்கவே, அங்கு அழிந்ததும்; 20

'தத்து நீர் வரால் குருமி வென்றதும்;
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தொடு ஆறு நூறுயிரம் பெற,
பண்டு, பட்டினப் பாலை கொண்டதும்; 21

'ஒருவர் முன் ஓர் நாள், ஒருவர் பின் ஓர் நாள்,
உதகை மன்னரே, மதுரை மன்னர், என்று
இருவர் தம்மையும் கிழிகள் சுற்றுவித்து,
எரி விளக்கு வைத்து, இகல் விளைத்ததும்; 22

### கரிகாலனுக்குப் பின் வந்தோர்

#### பராந்தகன்

'வேழம் ஒன்று உகைத்து, ஆலி விண்ணின்வாய்
விசை அடங்கவும் அசைய வென்றதும்;
ஈழமும் தமிழ்க் கூடலும் சிதைத்து,
இகல் கடந்தது ஓர் இசை பரந்ததும்; 23

#### இராசராசன்

'சதய நாள் விழா உதியர் மண்டலம்-
தன்னில் வைத்தவன், தனி ஓர் மாவின்மேல்
உதய பானு ஒத்து உதகை வென்ற கோன்,
ஒரு கை வாரணம் பல கவர்ந்ததும்; 24

#### இராசேந்திரன்

'களிறு கங்கை நீர் உண்ண, மண்ணையில்
காய் சினத்தொடே கலவு செம்பியன்,
குளிறு தெண் திரைக் குரை கடாரமும்
கொண்டு, மண்டலம் குடையுள் வைத்ததும்; 25

'கம்பிலிச் சயத்தம்பம் நட்டதும்;
கடி அரண் கொள் கல்யாணர் கட்டு அற,
கிம்புரிப் பணைக் கிரி உகைத்தவன்,
கிரிகள் எட்டினும் புலி பொறித்ததும்; 26

'ஒரு களிற்றின்மேல் வரு களிற்றை ஒத்து,
உலகு உயக்கொளப்பொருது, கொப்பையில்
பொரு களத்திலே முடி கவித்தவன்
புவி கவிப்பதோர் குடை கவித்ததும்; 27

### இராச மகேந்திரன்

பனுவலுக்கு முதல் ஆய வேதம் நான்கில்
பண்டு உரைத்த நெறி புதுக்கி, பழைய தங்கள்
மனுவினுக்கு மும்மடி நான்மடியாம் சோழன்
மதிக் குடைக்கீழ் அறம் தளிர்ப்ப, வளர்த்தவாறும்; 28

### குலோத்துங்கன் பிறப்பும் வெற்றியும்

'குந்தளரைக் கூடல சங்கமத்து வென்ற
கோன், அபயன், குவலயம் காத்து அளித்த பின்னை,
''இந்த நிலக் குலப் பாவை இவன்பால் சேர,
என்ன தவம் செய்திருந்தாள்!'' என்னத் தோன்றி, 29

'எவ்வளவும் திரிபுவனம் உளவாய்த் தோன்றும்,
எவ்வளவும் குல மறைகள் உளவாய் நிற்கும்,
அவ்வளவும் திகிரி வரை அளவும் செங்கோல்
ஆணை செல, அபயன் காத்து அளிக்குமாறும்; 30

### கரிகாலன் சோழர் வரலாற்றை நாரதர் உரைத்தபடி இமயமலையில் எழுதி வைத்தமை

'இப் புறத்து இமய மால் வரையின் மார்பின் அகலத்து
எழுதினன்—எழுதுதற்கு அரிய வேதம் எழுதி,
ஒப்புறத் தனது தொல் மரபும், அம் மரபின்மேல்
உரைசெய் பல் புகழும், ஒன்றும் ஒழியாத பரிசே. 31

'எழுதி, ''மற்று அது உரைசெய்பவர்கள் செய் பிழை எலாம்
எமர் பொறுக்க!'' என இப்படி முடித்த இதனைத்
தொழுது கற்றனம்' எனத் தொழுது சொல்லும் அளவில்,—
'சோழ வம்சம் இது சொன்ன அறிவு என்ன அழகோ!' 32

தேவி உவந்து, 'குலோத்துங்கனே உயிர்கள் எல்லாம் காப்பான்' எனப் புகழ்ந்து கூறுதல்

வையகமாம் குல மடந்தை, மன் அபயன்-
தன்னுடைய மரபு கேட்டே,
'ஐயனே யான் பெற்றெடுத்த அப்பொழுதும்
இப்பொழுது ஒத்து இருந்ததில்லை! 33

'உலகை எலாம் கவிக்கின்ற ஒரு கவிகைச்
சயதுங்கன் மரபின் கீர்த்தி
அலகை எலாம் கற்று உய்ம்மின்! அகில,
பூதம் காப்பான் அவனே!' என்ன— 34

# 9. பேய் முறைப்பாடு

பேய்கள் பசியின் கொடுமை கூறித் தேவியிடம் முறையிடுதல்

'ஆறுடைய திரு முடியான் அருளுடைய
பெருந்தேவி! அபயன் காக்கும்
பேறுடைய பூதமாப் பிறவாமல்,
பேய்களாப் பிறந்து கெட்டேம்! 1

'ஆர் காப்பார், எங்களை நீ அறிந்து, அருளிக்
காவாயேல்? அடையப் பாழ்த்த
ஊர் காக்க மதில் வேண்டா; உயிர் பாழ்த்த
உடம்பினை விட்டு, ஓடிப் போதும்! 2

'ஓய்கின்றேம்! ஓய்வுக்கும் இனி ஆற்றேம்!
ஒரு நாளைக்கு ஒரு நாள், நாங்கள்
தேய்கின்றபடி தேய்ந்து, மிடுக்கு அற்றேம்!
செற்றாலும் உய்ய மாட்டேம்! 3

'வேகைக்கு விறகு ஆனேம், மெலியா நின்றேம்!
மெலிந்த உடல் தடிப்பதற்கு விரகும் காணேம்!
சாகைக்கு இத்தனை ஆசை போதும்; பாழின்
சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்! 4

‘சாவத்தான் பெறுதுமோ—சதுமுகன்தான்,
கீழ் நாங்கள் மேல் நாள் செய்த
பாவத்தால், எம் வயிற்றில் பசியை வைத்தான்;
பசிக்கு அல்லேம்! எங்கட்கு அல்லேம்! 5

‘பதடிகளாய், காற்று அடிப்ப், நிலை நிலாமல்
பறக்கின்றேம்; பசிக்கு அலந்து, பாதி நாக்கும்
உதடுகளில் பாதியும் தின்று, ஒறுவாய் ஆனேம்;
உனக்கு அடிமை அடியேமை உய்யப் பாராய்! 6

‘அகளங்கன் நமக்கு இரங்கான், அரசர் இடும்
திறைக்கு அருள்வான்; அவன் தன் யானை
நிகளம் பூண்டன; அடியேம் நெடும் பசியால்
அற உலர்ந்து, நெற்றாய் அற்றேம்! 7

பேய்கள் நல் நிமித்தத்தால் உயிர் தாங்கியிருப்பதாகக் கூறுதல்

‘மூக்கு அருகே வழு நாறி, முடை நாறி,
உதடுகளும் துடிப்ப, வாயை
ஈக் கதுவும் குறியால், உய்ந்திருக்கின்றேம்;
அன்றாகில், இன்றே சாதும்!’— 8

அப்பொழுது இமயமலையிலிருந்து வந்த முது பேய், கலிங்க நாட்டில் தான் கண்ட தீ நிமித்தம் கூறுதல்

என்று பல கூளிகள் இரைத்து உரைசெய் போதத்து,
அன்று, இமய வெற்பினிடை நின்று வரும் அப் பேய், 9

கைதொழுது இறைஞ்சி, ‘அடியேன், வட கலிங்கத்து
எய்திய இடத்து உள நிமித்தம் இவை கேண்மோ: 10

‘மதக்கரி மருப்பு இற மதம் புலருமாலோ;
மடப் பிடி மருப்பு எழ மதம் பொழியுமாலோ;
கதிர்ச் சுடர் விளக்கு ஒளி கறுத்து எரியுமாலோ;
கால முகில் செங் குருதி கால வருமாலோ; 11

‘வார் முரசு இருந்து வறிதே அதிருமாலோ;
வந்து இரவில் இந்திரவில் வானில் இடுமாலோ;
ஊர் மனையில் ஊமன் எழ, ஓரி அழுமாலோ;
ஓம எரி ஈம எரிபோல் கமழுமாலோ: 12

'பூ இயலும் மாலைகள் புலால் கமழுமாலோ.
பொன் செய் மணி மாலை ஒளி போய் ஒழியுமாலோ;
ஓவியம் எலாம் உடல் வியர்ப்ப வருமாலோ;
ஊறு புனல் செங் குருதி நாற வருமாலோ.'— 13

'இந் நிமித்தங்களின் விளைவு யாதாம்?' என்று பேய்கள் வினவ,
தேவி, 'பரணிப்போர் தோன்றும்' எனல்

என, உரை முடித்ததனை, 'என்கொல் விளைவு?' என்றே
வினா உரைதனக்கு எதிர் விளம்பினள், அணங்கே: 14

'உங்கள் குறியும் வடகலிங்கத்து உள்ள குறியும், உமக்கு அழகே;
நங்கள் கணிதப் பேய் கூறும் நனவும் கனவும் சொல்லுவாம்; 15

' ''நிருபர் அணி வென்ற அகளங்கன் மத யானை
நிகளங்களொடு நிற்பன; அதற்கு
ஒரு பரணி உண்டு'' என உரைத்தன; உரைப்படி
உமக்கு இது கிடைக்கும்' எனவே,— 16

போர்ச் செய்தி கேட்டுப் பேய்கள் களிப்பு மிகுதல்

'தடித்தனம்! இனி, தலை தடித்தனம்!' என, பல
தனிப் பனை குனிப்ப எனவே,
நடித்தன நடிப்ப, வலி அற்றன கொடிற்றையும்
நனைத்தன, உதட்டினுடனே. 17

'விலக்குக, விலக்குக! விளைத்தன, விளைத்தன!'
எனக் களி விளைத்தன; விலா
அலக்கு உக அலக்கு உக அடிக்கடி சிரித்தன;
அயர்த்தன, பசித்த பசியே. 18

'கலிங்கப்போரில் எங்கள் வயிறுாரக் கூழ் கிட்டுமோ?' என்று பேய்கள்
வினவ,தேவி கலிங்கப்போரின் கொடுமை கூறல்

ஆடி இரைத்து எழு கணங்கள், 'அணங்கே! இக் கலிங்கக் கூழ்
கூடி இரைத்து உண்டுழி, எம் கூடு ஆரப் போதுமோ?' 19

' ''போதும் போதாது'' என நீர் புடைப் படலம் இட வேண்டா;
ஓதம் சூழ் இலங்கைப் போர்க்கு ஒட்டிரட்டி கலிங்கப் போர்!' 20

# 10. அவதாரம்

குலோத்துங்கன் வரலாற்றைக் காளிதேவி பேய்களுக்கு உரைத்தல்

'அன்று இலங்கை பொருது அழித்த அவனே, அப்
பாரதப் போர் முடித்து, பின்னை
வென்று இலங்கு கதிர் ஆழி விசயதரன்
என உதித்தான்; விளம்பக் கேண்மின்: 1

குலோத்துங்கனது பிறப்பு

'தேவர் எலாம் குறையிரப்ப, தேவகிதன்
திரு வயிற்றில் வசுதேவற்கு,
மூவுலகும் தொழ, நெடு மால் முன் ஒரு நாள்
அவதாரம் செய்த பின்னை,

'இருள் முழுதும் புவி அகல, இரவி குலம்
இனிது ஓங்க, இராசராசன்
அருள் திருவின் திரு வயிறும் ஆல் இலையின்
அவதரித்தான் அவனே, மீள.

'வந்தருளி அவதாரம் செய்தலுமே,
மண்ணுலகும், மறைகள் நான்கும்,
அந்தரம் நீங்கின என்ன, அந்தர
துந்துமி முழங்கி எழுந்தது ஆங்கே. 4

பாட்டியார் முதலியோரின் மகிழ்ச்சி

'அலர் மழையும் பொழிந்தன, ஆங்கு அவை கண்டு,
கங்கை கொண்ட சோழன் தேவி,
குலமகள்தன் குலமகனைக் கோகனத
மலர்க் கையால் எடுத்துக்கொண்டே, 5

'அவனிபர்க்குப் புரந்தரனும் அடையாளம்
அவயவத்தின் அடைவே நோக்கி,
''இவன் எமக்கு மகன் ஆகி, இரவி குலம்
பாரிக்கத் தகுவன்'' என்றே, 6

'''திங்களின் இளங் குழவி செம்மல் இவன்'' என்றும்,
''செய்ய பரிதிக் குழவி ஐயன் இவன்'' என்றும்,
தங்களின் மகிழ்ந்து, இரு குலத்து அரசர்தாமும்,
தனித்தனி உவப்பது ஓர் தவப் பயனும் ஒத்தே, 7

### குலோத்துங்கன் நடை கற்றலும் மழலை பேசுதலும்

'''பண்டு வசுதேவன் மகன் ஆகி, நிலமாதின்
படர் களையும் மாயன் இவன்'' என்று தெளிவு எய்த,
தண்டு, தனு, வாள், பணிலம், நேமி, எனும் நாமத்
தன் படைகளான திரு ஐம்படை தரித்தே, 8

'சினப்புலி வளர்ப்பது ஓர் சிறுப் புலியும் ஒத்தே,
திசைக் களிறு அணைப்பது ஓர் தனிக் களிறும் ஒத்தே,
அனைத்து அறமும் ஒக்க அடி வைக்க அடி வைத்தே,
அறத்தொடு மறத் துறை நடக்க நடை கற்றே— 9

'தாயர் தரு பால் முலை சுரக்க வரு நாளே
தானும் உலகத்தவர்தமக்கு அருள் சுரந்தே,
தூய மனுவும் சுருதியும் பொருள் விளங்கிச்
சொற்கள் தெரிய, தனது சொற்கள் தெரிவித்தே— 10

### முந்நூல் அணிதலும், வேதம் கற்றலும்

'திரு மார்பின் மலர் மடந்தை திருக் கழுத்தின்
மங்கல நாண் என்ன, முந்நூல்
பெரு மார்பின் சிறந்து ஒளிர, பிறப்பு இரண்டா-
வது பிறந்து சிறந்த பின்னர்,— 11

'போதம் கொள் மாண் உருவாய்ப் புவி இரந்த
அஞ் ஞான்று, புகன்று சென்ற
வேதங்கள் நான்கினையும், வேதியர்பால்
கேட்டருளி, மீண்டும் கற்றே, 12

'''நிறை வாழ்வைப் பெறல் நமக்கும் அணித்து'' என்று
நிலப்பாவை களிப்ப, விந்தத்து
உறைவாளைப் புயத்து இருத்தி, உடை வாளைத்
திரு அரையின் ஒளிர வைத்தே, 13

யானை ஏற்றம், குதிரை ஏற்றம், படைப் பயிற்சி, முதலிய பல கலைகளிலும் வல்லனாதல்

'''ஈர்-இரு மருப்புடைய வாரணம் உகைத்தே,
இந்திரன் எதிர்ந்தவரை வென்று வருமே; யான்,
ஓர் இரு மருப்புடைய வாரணம் உகைத்தே,
ஒன்னலரை வெல்வன்'' என, அன்னது பயின்றே, 14

'''இற்றை வரையும் செல, அருக்கன் ஒரு நாள்போல்
ஏழ் பரி உகைத்து, இருள் அகற்றி வருமே; யான்,
ஒற்றை வய மான் நடவி, இத் தரை வளாகத்து
உற்ற இருள் தீர்ப்பன்'' என, மற்று அது பயின்றே. 15

'சக்கரம் முதல் படை ஓர் ஐந்தும், முதல் நாளே
தன்னுடைய ஆன அதனால், ''அவை நமக்குத்
திக்கு விசயத்தின் வரும்'' என்று, அவை பயிற்றி,
செங் கை மலர் நொந்தில சுமந்தில தனக்கே. 16

'உரை செய் பல கல்விகளின் உரிமை பல சொல்லுவது என்
உவமை உரைசெய்யின், ''உலகத்து
அரைசர் உளர் அல்லர்'' என அவை புகழ, மல்கு கலை
அவை அவை பயின்ற பிறகே. 17

இளவரசுப் பதவி பெற்று, பின் திக்கு விசயம் செய்தல்

'இசையுடன் எடுத்த கொடி அபயன் அவனிக்கு இவனை
இளவரசில் வைத்த பிறகே,
திசை அளவும் உற்று அரசர் திருவினை முகப்பது ஒரு
திருவுளம் மடுத்தருளியே, 18

'வளர்வது ஓர் பதத்தினிடை, மத கரி முகத்தினிடை,
வளை உகிர் மடுத்து விளையாடு
இள அரி எனப் பகைஞர் எதிர் முனைகளைக் கிழிய
எறி படை பிடித்தருளியே, 19

'குட திசை புகக் கடவு குரகத ரதத்து இரவி
குறுகலும், எறிக்கும் இருள்போல்
வட திசை முகத்து அரசர் வரு கதம் உக, தனது
குரகதம் உகைத்தருளியே, 20

'புரம் எரி மடுத்த பொழுது, அது இது எனத் திகிரி
புகை எரி குவிப்ப, வயிரா-
கரம் எரிமடுத்து, அரசர் கரம் எதிர் குவிப்பது ஒரு
கடவரைதனைக் கடவியே, 21

'குளம் உதிரம் மெத்தியது ஓர் குரை கடல் கடுப்ப, எதிர்
குறுகலர்கள் விட்ட குதிரைத்
தளம் உதிர வெட்டி, ஒரு செரு முதிர ஓட்டினர்கள்,
தலை மலை குவித்தருளியே, 22

'மனுக் கோட்டம் தவிர்த்த பிரான் வளவர் பிரான் திருப் புருவத்
தனுக் கோட்ட, நமன் கோட்டம் பட்டது, சக்கரக் கோட்டம்! 23

'சரி களம் தொறும் தங்கள் சயமகள்-
தன்னை மன் அபயன் கைப் பிடித்தலும்,
பரிகளும் களிறும் தன ராசியும்
பாரிபோகம் கொடுத்தனர், பார்த்திபர். 24

'பொரு தராதிபர் கண்கள் சிவந்தில;
போரில் ஓடிய கால்கள் சிவந்தன!
விருத ராச பயங்கரன் செங் கையில்
வேல் சிவந்தது; கீர்த்தி வெளுத்ததே! 25

குலோத்துங்கன் வட நாட்டில் போர் செய்திருக்க, சோழ நாட்டில்
மன்னன் இறத்தலும், அதனால் அங்கு நிகழ்ந்த தீமைகளும்

'மா உகைத்து, ஒரு தனி அபயன், இப்படி
வட திசைமேல் செல, மன்னர் மன்னவன்
தேவருக்கு அரசனாய் விசும்பின்மேல் செல,
தென் திசைக்குப் புகும் தன்மை செப்புவாம்: 26

'மறையவர் வேள்வி குன்றி, மனு நெறி அனைத்தும் மாறி,
துறைகள் ஓர் ஆறும் மாறி, சுருதியும் முழக்கம் ஓய்ந்தே, 27

'சாதிகள் ஒன்றோடு ஒன்று தலைதடுமாறி, யாரும்
ஓதிய நெறியில் நில்லாது, ஒழுக்கமும் மறந்து போயே, 28

'ஒருவரை ஒருவர் கைம்மிக்கு, உம்பர்தம் கோயில் சாம்பி,
அரிவையர் கற்புச் சோம்பி, அரண்களும் அழிய, ஆங்கே, 29

### குலோத்துங்கன் சோழ நாட்டிற்கு மீண்டு, அதனை நல்வழிப்படுத்தல்

'கலி இருள் பரந்த காலை, கவி இருள் கரக்கத் தோன்றும்
ஒலி கடல் அருக்கன் என்ன, உலகு உய்ய, வந்து தோன்றி, 30

'காப்பு எலாம் உடைய தானே படைப்பதும் கடனாக் கொண்டு,
கோப்பு எலாம் குலைந்தோர்தம்மைக் குறியிலே நிறுத்தி வைத்தே, 31

### திரு அபிடேகம் செய்து, குலோத்துங்கன் முடி புனைதல்

'விரிபுனல் வேலை நான்கும் வேதங்கள் நான்கும் ஆர்ப்ப,
திரிபுவனங்கள் வாழ்த்த, திரு அபிடேகம் செய்தே, 32

'அறை கழல் அரசர் அப்பொழுது அடிமிசை அறுகு எடுத்திட,
மறையவர் முடி எடுத்தனர், மனு நெறி தலையெடுக்கவே. 33

'நிரை மணி பல குயிற்றிய நெடு முடிமிசை, விதிப்படி
சொரி புனலிடை முளைத்தன துறைகளின் அறம் அனைத்துமே. 34

'பொது அற உலகு கைக்கொடு, புலி வளர் கொடி எடுத்தலும்,
அது முதல், கொடி எடுத்தன, அமரர்தம் விழவு எடுக்கவே. 35

'குவி கைகொடு அரசர் சுற்றிய குரை கழல் அபயன் முத்து அணி
கவிகையின் நிலவு எறித்தது; கலி எனும் இருள் ஒளித்ததே; 36

'அரன் உறையும்படி மலைகள் அடைய விளங்கின—அனையோன்
ஒரு தனி வெண்குடை உலகில் ஒளி கொள் நலம் தரு நிழலில்! 37

'அரி துயிலும்படி கடல்கள் அடைய விளங்கின—கவினின்
ஒரு கரு வெங் கலி கழுவி, உலவு பெரும் புகழ் நிலவில். 38

'நிழலில் அடைந்தன, திசைகள்; நெறியில் அடைந்தன, மறைகள்;
கழலில் அடைந்தனர், உதியர்; கடலில் அடைந்தனர், செழியர். 39

'கருணையொடும் தனது உபய கரம் உதவும் பொருள் மழையின்,
அரணிய மந்திர அனல்கள்அவை உதவும் பெரு மழையே. 40

'பரிசில் சுமந்தன, கவிகள்; பகடு சுமந்தன, திறைகள்;
அரசு சுமந்தன, கழல்கள்; அவனி சுமந்தன, புயமும். 41

'விரித்த வாள் உகிர் விழித் தழற் புலியை
மீது இருத்த இமயத்தினைத்
திரித்த கோலில் வளைவு உண்டு; நீதி புரி
செய்ய கோலில் வளைவு இல்லையே. 42

'கதங்களின் பொருது இறைஞ்சிடா அரசர்
கால்களில் தளையும், நூல்களின்
பதங்களில் தளையும் அன்றி, வேறு ஒரு
பதங்களில் தளைகள் இல்லையே. 43

'மென் கலாப மட மாதர் சீறடி-
மிசைச் சிலம்பு ஒலி விளைப்பது ஓர்
இன் கலாம் விளைவது அன்றி, எங்கும் ஓர்
இகல் கலாம் விளைவது இல்லையே. 44

குலோத்துங்கன் பொழுது போக்குதல்

'வரு செரு ஒன்று இன்மையினால், மற்போரும்,
சொல் புலவோர் வாதப் போரும்,
இரு சிறை வாரணப் போரும், இகல் மத
வாரணப் போரும், இனைய கண்டே, 45

'கலையினொடும், கவிவாணர் கவியினொடும்
இசையினொடும், காதல் மாதர்
முலையினொடும், மனு நீதி முறையினொடும்,
மறையினொடும், பொழுது போக்கி— 46

காவிரிக் கரையில் வேட்டை ஆடிய குலோத்துங்கன், பாலாற்றங்
கரையில் பரிமேல் சென்று வேட்டையாட விரும்புதலும்,
அதன்பொருட்டுப் படைகள் திரளுதலும்

'காலால் தண்டலை உழக்கும் காவிரியின்
கரை மருங்கு வேட்டை ஆடி,
''பாலாற்றங் கரை மருங்கு பரி வேட்டை
ஆடுதற்குப் பயணம்'' என்றே, 47

' ''முரசு அறைக!'' என்று அருளுதலும், முழுது உலகும்
ஒரு நகருள் புகுந்தது ஒப்ப,
திரை செய் கடல் ஒலி அடங்க, திசை நான்கின்
படை நான்கும் திரண்ட, ஆங்கே. 48

### பரிவாரங்களுடன் குலோத்துங்கன் வேட்டையாடப் புறப்படுதல்

'அழகின்மேல் அழகு பெற, அணி அனைத்தும்
அணிந்தருளி, கணித நூலில்
பழகினர் தெரிந்து உரைத்த பழுது அறு நாள்,
பழுது அற்ற பொழுதத்து ஆங்கே, 49

'அனக தானம் மறை வாணர் பலர் நின்று பெறவே,
அபய தானம் அபயம் புகுதும் மன்னர் பெறவே,
கனக தானம் முறை நின்று கவிவாணர் பெறவே,
கரட தானம் மத வாரணமும் அன்று பெறவே. 50

'மற்ற வெங் கட களிற்றின், உதயக்கிரியின்மேல்
மதி கவித்திட உதித்திடும் அருக்கன் எனவே,
கொற்ற வெண்குடை கவிப்ப, மிசைகொண்டு கவரி
குல மதிப் புடை கவிழ்த்த நிலவு ஒத்து வரவே, 51

'ஒரு வலம்புரி தழங்கு ஒலி முழங்கி எழவே,
உடன் முழங்கு பணிலம் பல முழங்கி எழவே,
பருவம் வந்து பல கொண்டல்கள் முழங்கி எழவே,
பல விதங்களொடு பல் இயம் முழங்கி எழவே, 52

'மன்னர் சீர் சயம் மிகுத்து இடை விடாத ஒலியும்,
மறைவலாளர் மறை நாள்வயின் வழாத ஒலியும்,
இன்ன மா கடல் முழங்கி எழுகின்ற ஒலி என்று
இம்பர் உம்பர் அறியாத பரிசு எங்கும் மிகவே, 53

### பட்டத்து அரசியரும் மகளிர் சூழ உடன் வந்தமை

'வாழி சோழ குலசேகரன் வகுத்த இசையின்,
மதுர வாரி எனலாகும் இசை மாது அரிது என,
ஏழு பார் உலகொடு ஏழ் இசை வளர்க்க உரியாள்
யானை மீது பிரியாது உடன் இருந்து வரவே, 54

'பொன்னின் மாலை மலர் மாலை பணி மாறி, உடனே
புவனி காவலர்கள் தேவியர்கள் சூழ் பிடி வர,
சென்னி ஆணையுடன் ஆணையை நடத்தும் உரிமைத்
தியாகவல்லி நிறை செல்வி உடன் மல்கி வரவே, 55

'பிடியின்மேல் வரு பிடிக்குலம் அநேகம் எனவே,
பெய் வளைக் கை மடமாதர் பிடி மீது வரவே;
முடியின்மேல் முடி நிரைத்து வருகின்றது எனவே,
முறை செய் மன்னவர்கள் பொன் குடை கவித்து வரவே; 56

சேனைகள் செல்லும் காட்சி

'ஆனை மீது வரும் ஆனையும் அநேகம் எனவே,
அடு களிற்றின்மிசை கொண்டு அரசு அநேகம் வரவே;
சேனை மீதும் ஒரு சேனை வருகின்றது எனவே,
தெளி படைக் கலம் எலாம் ஒளி படைத்து வரவே; 57

'முகிலின்மேல் முகில் முழங்கி வருகின்றது எனவே,
மூரியானைகளின்மேல் முரசு அதிர்ந்து வரவே;
துகிலின்மேல் வரு துகிற்குலமும் ஒக்கும் எனவே,
தோகை நீள் கொடிகள்மேல் முகில் தொடங்கி வரவே; 58

'தேரின் மீது வரு தேர்களும் அநேகம் எனவே,
செம் பொன் மேகலை நிதம்ப நிரை தேரின் வரவே;
பாரின் மீதும் ஒரு பார் உளது போலும் எனவே,
படல தூளியும் எழுந்து அடைய மூடி வரவே; 59

'யானை மேல் இளம் பிடியின் மேல் நிரைத்து,
இடையறுத பொன் இலகடங்கள் அச்
சேனை, மா கடற்கு அபயன் இம் முறைச்
சேது பந்தனம் செய்தது ஒக்கவே; 60

' ''நீல மா மணிச் சிவிகை வெள்ளமும்,
நித்திலக் குலக் கவிகை வெள்ளமும்,—
காலினுல் வரும் யமுனை வெள்ளமும்,
கங்கை வெள்ளமும், காண்மின்!'' என்னவே; 61

'கெண்டை, மாசுணம், உவணம், வாரணம்,
கேழல், ஆளி, மா மேழி, கோழி, வில்,
கொண்ட ஆயிரம் கொடி நுடங்கவே,
குமுறு வெம் புலிக்கொடி குலாவவே; 62

'தொடைகள், கந்தரம், புடைகொள் கொங்கைகள்,
சோதி வாள் முகம், கோதை ஓதி, மென்
நடைகள், மென் சொல், என்று அடைய ஒப்பு இலா
நகை மணிக் கொடித் தொகை பரக்கவே; 63

'எங்கும் உள, மென் கதலி! எங்கும் உள, தண் கமுகம்!
எங்கும் உள, பொங்கும் இளநீர்!
எங்கும் உள, பைங்குமிழ்கள்! எங்கும் உள, செங்குமுதம்!
எங்கும் உள, செங் கயல்களே! 64

'ஆறு அலை தரங்கம் உள, அன்ன நடைதாமும் உள,
ஆலை கமழ் பாகும் உளவாய்,
வேறும் ஒரு பொன்னி வள நாடு சயதுங்கன் முன்
விதித்ததுவும் ஒக்கும் எனவே; 65

வேழ நிரை என்ற மலை எங்கும் மிடைகின்ற அயில்
வென்றி அபயன் தன் அருளால்
வாழ அபயம் புகுது சேரனொடு கூடிமலை-
நாடு அடைய வந்தது எனவே; 66

'அக் கிரி குலங்கள் விடும் அங்குலியின் நுண் திவலை,
அச் செழியர் அஞ்சி விடும் அத்
திக்கில் உள நித்திலம் முகந்து கொடு வீசி ஒரு
தென்றல் வருகின்றது எனவே; 67

குலோத்துங்கன் தில்லைப் பெருமானை வணங்கி விடை கொண்டு,
திருவதிகையில் தங்கி, பின் கச்சி நகரை அடைதல்

'தென் திசையின்நின்று வட திக்கின் முகம் வைத்தருளி,
முக் கணுடை வெள்ளிமலையோன்,
மன்றில் நடமாடி, அருள்கொண்டு, விடை கொண்டு, அதிகை
மா நகருள் விட்டருளியே— 68

'விட்ட அதிகைப் பதியில்நின்று பயணம், பயணம்
விட்டு, விளையாடி அபயன்
வட்ட மதி ஒத்த குடை மன்னர் தொழ, நண்ணினன்—
வளம் கெழுவு கச்சி நகரே.' 69

கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் தேவியை அணுகிக் கூறியவை

என்னும் இத மென் மொழி எடுத்து இறைவி சொல்லுவதன்
முன்னம், இகல் கண்டது ஒரு பேய்,
தன்னுடைய கால் தனது பின் பட, மனத்து உவகை
தள்ளி வர, ஓடி வரவே, 70

'கலிங்கர் குருதி, குருதி! கலிங்கம் அடைய, அடைய!
மெலிந்த உடல்கள் தடிமின்! மெலிந்த உடல்கள் தடிமின்! 71

'உணங்கல் வயிறு குளிர, உவந்து பருக, பருக!
கணங்கள் எழுக, எழுக! கணங்கள் எழுக, எழுக! 72

'என் செய, பாவிகாள்! இங்கு இருப்பது? அங்கு இதற்கு முன்னே
வன் சிறைக் கழுகும் பாறும் வயிறுகள் பீறிப் போன. 73

'வயிறுகள் என்னில், போதா, வாய்களோ போதா, பண்டை
எயிறுகள் என்னில், போதா; என்னினும், ஈண்டப் போதும்! 74

'சிர மலை விழுங்க, செந்நீர்த் திரைக் கடல் பருகலாக,
பிரமனை வேண்டி, பின்னும் பெரும் பசி பெறவும் வேண்டும்.' 75

### பேய்களின் பெரு மகிழ்ச்சி

என்ற ஓகை தம் செவிக்கு இசைத்தலும், தசைப் பிணம்
தின்றபோல் பருத்து மெய், சிரித்து மேல் விழுந்துமே, 76

ஓகை சொன்ன பேயின் வாயை ஓடி முத்தம் உண்ணுமே;
'சாகை சொன்ன பேய்களைத் தகர்க்க, பற்கள்!' என்னுமே. 77

பிள்ளை வீழ வீழவும் பெருந் துணங்கை கொட்டுமே;
வள்ளை பாடி, ஆடி ஓடி, 'வா!' எனு அழைக்குமே. 78

'மனு உடுத்த தேவி வாழி! வாழி!' என்று வாழ்த்தியே,
கனு உரைத்த பேயினைக் கழுத்தினில் கொடு ஆடுமே. 79

ஆடி வரு பேய்களின் அலந்தலை தவிர்த்து, அடு
பறந்தலை அறிந்து அதனின் நின்று
ஓடி வரு பேயை,'இகல் உள்ளபடி சொல்க!' என
உரைத்தனள். உரைத்தருளவே— 80

## 11. காளிக்குக் கூளி கூறியது

### கலிங்கப் போரின் கொடுமையைக் கூறுதல்

'மா ஆயிரமும் பட, கலிங்கர் மடிந்த களப் போர் உரைப்போர்க்கு
நா ஆயிரமும், கேட்போர்க்கு நாள் ஆயிரமும், வேண்டுமால்! 1

'ஒருவர்க்கு ஒரு வாய் கொண்டு உரைக்க ஒண்ணுதேனும், உண்டாகும்
செருவைச் சிறியேன் விண்ணப்பம் செய்ய, சிறிது கேட்டருளே: 2

காஞ்சியில் குலோத்துங்கன் வீற்றிருந்த திருவோலக்கச் சிறப்பு

'பார் எலாம் உடையான் அபயன் கொடைப்
பங்கயக் கரம் ஒப்பு என, பண்டு ஓர் நாள்,
கார் எலாம் எழுந்து ஏழரை நாழிகைக்
காஞ்சனம் பொழி காஞ்சிஅதன்கணே, 3

' ''அம் பொன் மேரு அதுகொல்! இதுகொல்!'' என்று
ஆயிரம் கதிர் வெய்யவன் ஐயுறும்
செம் பொன் மாளிகை, தென் குட திக்கினில்,
செய்த சித்திர மண்டபம்தன்னிலே, 4

'மொய்த்து இலங்கிய தாரகை வானின் நீள்
முகட்டு எழுந்த முழு மதிக்கு ஒப்பு என
நெய்த்து இலங்கிய நித்திலப் பந்தரின்
நின்று வெண்குடை ஒன்று நிழற்றவே, 5

'மேல் கவித்த மதிக் குடையின்புடை
வீசுகின்ற வெண் சாமரை, தன் திருப்
பாற்கடல் திரை ஓர் இரண்டு ஆங்கு இரு-
பாலும் வந்து பணி செய்வ போலவே, 6

'அம் கண் ஞாலம் அனைத்தும் புயத்தில் வைத்து,
ஆடகக் கிரியில் புலி வைத்தவன்
சிங்க ஆசனத்து ஏறி இருப்பது ஓர்
சிங்க ஏறு எனச் செவ்வி சிறக்கவே, 7

'பணிப் பணத்து உறை பார்க்கு ஒரு நாயகன்,
பல் கலைத் துறை நாவில் உறைந்தவன்,
மணிப் பணிப் புயத்தே சிங்க வாகனி
வந்து செந் திரு மாதொடு இருக்கவே, 8

'தரு மடங்க முகந்து தனம் பொழி
தன் புயம் பிரியாச் சயப் பாவையும்
திருமடந்தையும்போல், பெரும் புண்ணியம்
செய்த தேவியர் சேவித்திருக்கவே, 9

'நாடகாதி நிருத்தம் அனைத்தினும்,
நால் வகைப் பெரும் பண்ணினும், எண்ணிய
ஆடல் பாடல் அரம்பையர் ஒத்துள
அணுக்கிமாரும் அநேகர் இருக்கவே, 10

'சூதர் மாகதர் ஆதிய மாந்தரும்,
துய்ய மங்கலப் பாடகர்தாமும், ''நின்
பாதம் ஆதரர் ஆயவர்கட்கு எலாம்
பைம் பொன் மௌலி'' எனப் புகழ் பாடவே, 11

'வீணை, யாழ், குழல், தண்ணுமை, வல்லவர்,
''வேறு வேறு இவை நூறு விதம் பட,
காணல் ஆம் வகை கண்டனம்; நீ இனிக்
காண்டல் வேண்டும்!'' எனக் கழல் போற்றவே, 12

'தாளமும் செலவும் பிழையா வகை
தான் வகுத்தன தன் எதிர் பாடியே,
காளமும் களிறும் பெறும் பாணர்தம்
கல்வியில் பிழை கண்டனன் கேட்கவே, 13

'வெங் களிற்றில் இழிந்த பின், வந்து அடி
வீழ்ந்த மன்னவர், வெந்நிடும் முன் இடு
தங்கள் பொன் குடை சாமரம் என்று இவை
தாங்கள் தம் கரத்தால், பணிமாறவே, 14

'தென்னர் ஆதி நராதிபர் ஆனவர்
தேவிமார்கள் தன் சேடியர் ஆகவே,
மன்னர் ஆதிபன், வானவர் ஆதிபன்
வந்து இருந்தனன் என்ன, இருக்கவே— 15

அமைச்சர் முதலியோருடன் குலோத்துங்கன் இருந்த அவையில், அரசன் கருத்து அறிந்து, பல தேசத்து மன்னர் வந்து குழுமுதல்

'மண்டலீகரும் மா நில வேந்தரும்
வந்து உணங்கு கடைத்தலை, வண்டை மன்
தொண்டைமான் முதல் மந்திர பாரகர்
சூழ்ந்து, தன் கழல் சூடி இருக்கவே, 16

'முறையிட, திருமந்திரவோலையாள்
முன் வணங்கி, ''முழுவதும் வேந்தர் தம்
திறை இட, புறம் நின்றனர்'' என்றலும்,
செய்த நோக்கில் வந்து, எய்தி நெருக்கவே, 17

'தென்னவர், வில்லவர், கூபகர், சாவகர், சேதிபர், யாதவரே,
கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், காரிபர், கோசலரே. 18

‘கங்கர், கராளர், கவிந்தர், துமிந்தர், கடம்பர், துளும்பர்களே,
வங்கர், இலாடர், மராடர், விராடர், மயிந்தர், சயிந்தர்களே, 19

‘சிங்களர், வங்களர், சேகுணர், சேவணர், சீயணர், ஐயணரே,
கொங்கணர், கொங்கர், குலிங்கர், அவந்தியர், குச்சரர், கச்சியரே, 20

‘வத்தவர், மத்திரர், மாளுவர், மாகதர், மச்சர், மிலேச்சர்களே,
குத்திரர், குத்தர், குடக்கர், பிடக்கர், குருக்கர், துருக்கர்களே, 21

மன்னர்கள் குலோத்துங்கனை வணங்கித் திறை செலுத்துதல்

‘ ‘‘எந் நகரங்களும் நாடும் எமக்கு அருள் செய்தனை; எம்மை இடச்
சொன்ன கரங்கள் கொணர்ந்தனம்’’ என்று அடி சூடு கரங்களொடே, 22

‘ ‘‘ஆரம் இவை; இவை பொற் கலம்; ஆனை இவை; இவை ஒட்டகம்;
ஆடல் அயம் இவை; மற்று இவை ஆதி முடியொடு பெட்டகம்;
ஈரம் உடையன நித்திலம், ஏறு நவ மணி கட்டிய
ஏக வடம் இவை; மற்று இவை யாதும் விலை இல் பதக்கமே. 23

‘ ‘‘இவையும் இவையும் மணித் திரள்; இனைய இனைய தனக் குவை;
இருளும் வெயிலும் எறித்திட இலகும் இவை மகரக் குழை;
உவையும் உவையும் இலக்கணம் உடைய பிடி; உவை புட்பகம்;
உயர் செய் கொடி இவை; மற்று இவை உரிமை அரிவையர் பட்ட
[மே; 24

‘ ‘‘ஏறி அருள அடுக்கும் இந் நூறு களிறும்; இவற்று எதிர்
ஏனை அரசர் ஒருத்தர் ஓர் ஆனை இடுவர்எனில், புவி
மாறி அருள அவர்க்கு இடை யாமும் இசைவம்’’ எனப் பல
மான அரசர் தனித்தனி வாழ்வு கருதி உரைப்பரே. 25

மன்னன் வினவும் மந்திரக் கணக்கர் விடையும்

‘ ‘‘அரசர், அஞ்சல்!’’ என அடி இரண்டும் அவர்
முடியில் வைத்தருளி, ‘அரசர் மற்று
உரைசெயும் திறைகள் ஒழிய, நின்றவரும்
உளர்கொல்?’ என்று அருளு பொழுதிலே, 26

‘ ‘‘கடவ தம் திறைகொடு அடைய வந்து அரசர்
கழல் வணங்கினர்கள்; இவருடன்
வட கலிங்கர் பதிஅவன் இரண்டு விசை
வருகிலன், திறைகொடு’’ எனலுமே, 27

மன்னன் முறுவல் கொண்டு, 'கலிங்க வேந்தனைக் கொணர்மின்!' எனல்

'"உறுவது என்கொல்!" என, உடல் குலைந்து அரசர்
உயிர் நடுங்க, ஒளிர் பவளவாய்
முறுவல் கொண்ட பொருள் அறிகிலம்; சிறிதும்
முனிவு கொண்டது இலை வதனமே. 28

'"எளியன் என்றிடினும், வலிய குன்று அரணம்
இடிய, நம் படைஞர் கடிது சென்று,
அளி அலம்பு மதமலைகள் கொண்டு அணைமின்;
அவனையும் கொணர்மின்!" எனலுமே, 29

வண்டை மன் கருணாகரன் கலிங்கப் போருக்கு விடைபெறுதல்

'இறை மொழிந்த அளவில், "எழு கலிங்கம் அவை
எறிவன்!" என்று, கழல் தொழுதனன்—
மறை மொழிந்தபடி மரபின் வந்த குல
திலகன், வண்டை நகர் அரசனே. 30

'"அடைய அத் திசைப் பகை துகைப்பன்" என்று,
ஆசை கொண்டு, அடல் தொண்டைமான்,
"விடை எனக்கு" என, புலி உயர்த்தவன்
விடை கொடுக்க, அப்பொழுதிலே,— 31

நால் வகைப் படைகளும் போருக்குத் திரண்டு எழுதல்

'"கடல் கலக்கல்கொல்! மலை இடித்தல்கொல்!
கடு விடப் பொறிப் பண பணிப்
பிடர் ஒடித்தல்கொல்!—படை நினைப்பு!" என,
பிரளயத்தினில் திரளவே, 32

'வளை கலிப்பவும், முரசு ஒலிப்பவும்,
மரம் இரட்டவும், வயிர மாத்
தொளை இசைப்பவும், திசை இபச் செவித்
தொளை அடைத்தலைத் தொடரவே; 33

'குடை நிரைத்தலின், தழை நெருக்கலின்,
கொடி விரித்தலின், குளிர் சதுக்கம் ஒத்து
இடை நிரைத்தலின், பகல் கரப்ப உய்த்து,
இரு நிலப் பரப்பு இருள் பரக்கவே; 34

'அலகு இல் வட்டிகை தழல் விரித்தலால்,
அரிய பொன் பணிக் கலன் எறித்தலால்,
இலகு கைப் படை கனல் விரித்தலால்,
இருள் கரக்கவே, ஒளி பரக்கவே; 35

'அகில வெற்பும் இன்று ஆனை ஆனவோ!
அடைய மாருதம் புரவி ஆனவோ!
முகில் அனைத்தும் அத் தேர்கள் ஆனவோ!
மூரி வேலை போர் வீரர் ஆனவோ? 36

' ''பார் சிறுத்தலின், படை பெருத்ததோ!
படை பெருத்தலின், பார் சிறுத்ததோ!
நேர் செறுத்தவர்க்கு அரிது, நிற்பிடம்;
நெடு விசும்பு அலால், இடமும் இல்லையே!'' 37

'என எடுத்து உரைத்து, அதிசயித்து நின்று,
இனைய மண்ணுளோர், அனைய விண்ணுளோர்,
மனம் நடுக்குற, புறம் மறைத்தவால்,
மாதிரங்களில் சாதுரங்கமே! 38

' ''கடல்களைச் சொரி மலை உள'' என, இரு
கட தடத்திடை பொழி மதம் உடையன,
''கனல் விளைப்பன முகில் உள'' என, விழி
கனல் சினத்தன, ''கரியொடு பரிகளின்
உடல் பிளப்பன பிறை சில உள'' என,
உயர் மருப்பின, ''உலகுகள் குலைதர
உரும் இடிப்பன வட அனல் உள'' என,
ஒலி முழக்கின கட கரி மிடையவே; 39

'முனைகள் ஒட்டினர் முடிகளை இடறுவ,
முடியின் முத்தினை விளை புகழ் என நில
முதுகில் வித்துவ, நிலம் உறு துகள் அற
முகில் மிதிப்பன, முகில் விடு துளியொடு
கனை கடல் திரை நிரை என விரைவொடு
கடல் இடத்தினை வலம் இடம் வருவன,
கடவிடத்து இறும் இடி என, அடி இடு
கவனம் மிக்கன, கதழ் பரி கடுகவே; 40

'இரு நிலத் திடர் உடைபடும் உருளன,
இரு புடைச் சிறகு உடையன, முனை பெறின்,
எதிர் பறப்பன, விடு நுகமொடு கடிது
இவுளி முற்படின், 'இது பரிபவம்' எனும்
ஒரு நினைப்பினை உடையன, வினையன
உயர் செய் மொட்டொடு மலர் என நிறுவிய,
ஒழிதரச் செரு உறு புனல் உமிழ்வன,
உலகு அளப்பன, இரதமும் விரவவே; 41

'அலகில் வெற்றியும் உரிமையும் இவை என,
அவயவத்தினில் எழுதிய அறிகுறி
அவை என, பல வடு நிரை உடையவர்,
அடி புறக்கிடில் அமரர்தம் உலகொடு இவ்
உலகு கைப்படும் எனினும், அது ஒழிபவர்,
உடல் எமக்கு ஒரு சுமை என முனிபவர்,
உயிரை விற்று உறு புகழ் கொள உழல்பவர்,
ஒருவர் ஒப்பவர் படைஞர்கள் மிடையவே; 42

படைகளின் எழுச்சி

'விழித்த விழி கனல் விழித்த விருதர்கள்
விடைத்து, வெடுவெடு சிரித்த வாய்
தெழித்த பொழுது, உடல் திமிர்க்க இமையவர்,
திகைக்கண் மத கரி திகைக்கவே; 43

'உகத்தின் முடிவினில் உகைத்த கனை கடல்
உவட்டி என முகில் முகட்டின்மேல்,
நகைத்து விடு பரி முகத்து நுரை, சுர
நதிக்கண் நுரை என, மிதக்கவே, 44

'கழப்பு இல், வெளில் சுளி கதத்தில், இரு கவுள்
கலித்த கடம் அடி பொறுத்த பார்
குழப்பி வரு முகில் முழக்கில், அலை கடல்
குடித்த முகில்களும் இடக்கவே; 45

'கடுத்த விசை உருள் தொடுத்த, உலகு ஒரு
கணத்தில் வலம்வரு, கணிப்பு இல் தேர்
எடுத்த கொடி, திசை இபத்தின் மதம் மிசை
இருக்கும் அளிகளை எழுப்பவே; 46

### படைகளின் வழிச் செலவினால் நிகழ்ந்தவை

'எழுந்தது, சேனை; எழலும், இரிந்தது, பாரின் முதுகு;
விழுந்தன, கானும் மலையும்; வெறுந் தரை ஆன, நதிகள்! 47

'அதிர்ந்தன, நாலு திசைகள்; அடங்கின, ஏழு கடல்கள்;
பிதிர்ந்தன, மூரி மலைகள்; பிறந்தது, தூளி படலம்! 48

'நிலம் தரு தூளி பருகி, நிறைந்தது, வானின் வயிறு;
வலம் தரு மேக நிரைகள் வறந்தன, நீர்கள் சுவறி! 49

'தயங்கு ஒளி ஓடை வரைகள் தரும் கட தாரை மழையின்,
அயங்களின் வாயின் நுரையின், அடங்கின, தூளி அடைய! 50

'எழு தூளி அடங்க நடந்து, உதயத்து
ஏகும் திசை கண்டு, அது மீள விழும்
பொழுது ஏகல் ஒழிந்து, கடல்-படை, எற்
பொழுதும் தவிராது, வழிக்கொளவே; 51

### கருணாகரன் முதலிய பெரு வீரர் யானைமேல் செல்லுதல்

'தண் ஆர் மலர் சேர்திரள் தோள் அபயன்
தான் ஏவிய சேனைதனக்கு அடையக்
கண் ஆகிய சோழன சக்கரம் ஆம்
கருணாகரன் வாரணம் மேற்கொளவே. 52

'தொண்டையர்க்கு அரசு முன் வரும் சுரவி,
துங்க வெள் விடை உயர்த்த கோன்,
வண்டையர்க்கு அரசு, பல்லவர்க்கு அரசு,
மால் களிற்றின்மிசை கொள்ளவே, 53

'வாசி கொண்டு அரசர் வாரணம் கவர,
வாண கோவரையன் வாள் முகத்
தூசி கொண்டு, முடி கொண்ட சோழன் ஒரு
சூழி வேழம்மிசை கொள்ளவே, 54

'மறித்து ஓடி எவ் அரசும் சாய வென்று
வரும் அனுக்கைப் பல்லவர் கோன், வண்டை வேந்தன்,
எறித்து ஓடை இலங்கு நடைக் களிற்றின் மேற்கொண்டு,
இரை வேட்ட பெரும் புலிபோல், இகல்மேற் செல்ல— 55

சேனைகள் வழியிலுள்ள பல ஆறுகளையும் கடந்து சென்றமை

‘பாலாறு, குசைத்தலை, பொன் முகரிப்
பழவாறு, படர்ந்து எழு கொல்லி எனும்
நால் ஆறும் அகன்று, ஒரு பெண்ணை எனும்
நதி ஆறு கடந்து, நடந்து உடனே, 56

‘வயல் ஆறு புகுந்து, மணிப் புனல் பாய்
மண்ணாறு, வளம் கெழு குன்றி எனும்
பெயல் ஆறு, பரந்து நிறைந்து வரும்
பேர் ஆறும் இழிந்தது, பிற்படவே. 57

‘கோதாவரி நதி மேல் ஆறொடு, குளிர்
பம்பா வள நதி, சந்தப் பேர்
ஓதாவரு நதி, ஒரு கோதமையுடன்,
ஒலி நீர் மலி துறை பிறகு ஆக, 58

படைகள் கலிங்கம் புக்கு, ஊர்களுக்கு எரியிட்டுச் சூறையாடுதல்

‘கடையில் புடைபெயர் கடல் ஒத்து, அமரர்
கலங்கும் பரிசு கலிங்கம் புக்கு,
அடையப் படர் எரி கொளுவி, பதிகளை
அழியச் சூறைகொள் பொழுதத்தே— 59

கலிங்க நாட்டு மக்கள் தம் மன்னனிடம் முறையிடுதல்

‘ ‘‘கங்காநதி ஒரு புறம் ஆக, படை
கடல்போல் வந்தது! கடல் வந்தால்,
எங்கே புகலிடம்? எங்கே இனி அரண்?
யாரே, அதிபதி, இங்கு?’’ என்றே, 60

‘ ‘‘இடிகின்றன, மதில்! எரிகின்றன, பதி!
எழுகின்றன, புகை! பொழில் எல்லாம்
மடிகின்றன! குடி கெடுகின்றனம்! இனி
வளைகின்றன, படை பகை!’’ என்றே, 61

‘ ‘‘உலகுக்கு ஒரு முதல் அபயற்கு இடு திறை
உரை தப்பியது;—எமது அரசே!—எம்
பல கற்பனைகளை நினைவுற்றிலை; வரு
படை, மற்று அவன் விடு படை!’’ என்றே, 62

'உரையின் குழறியும் உடலின் பதறியும்
ஒருவர்க்கு ஒருவர் முன் முறையிட்டே,
அரையில் துகில் விழ, அடையச் சனபதி
அடியில் புக விழு பொழுதத்தே— 63

### வட கலிங்கமன்னன் சினந்து மொழிதல்

'அந்தரம் ஒன்று அறியாத வட கலிங்கர்
குல வேந்தன், அனந்தபன்மன்,
வெந் தறுகண் வெகுளியினுல் வெய்து உயிர்த்து,
கை புடைத்து, வியர்த்து நோக்கி, 64

' ''வண்டினுக்கும் திசை யானை மதம் கொடுக்கும்
மலர்க் கவிகை அபயற்கு அன்றி,
தண்டினுக்கும் எளியனே?'' என வெகுண்டு,
தடம் புயங்கள் குலுங்க நக்கே, 65

' ''கான் அரணும், மலை அரணும், கடல் அரணும்,
சூழ் கிடந்த கலிங்கர் பூமி-
தான் அரணம் உடைத்து என்று கருதாது,
வருவதும் அத் தண்டு போலும்!'' 66

### அமைச்சன் எங்கராயனது அறிவுரை

'என்று கூறலும், எங்கராயன், ''நான்
ஒன்று கூறுவன்; கேள்!'' என்று உணர்த்துவான்: 67

' ''அரைசர் சீறுவரேனும், அடியவர்
உரைசெயாது ஒழியார்கள், உறுதியே; 68

' ''ஏனை வேந்தை எறியச் சயதரன்
தானை அல்லது, தான் வர வேண்டுமோ? 69

' ''விட்ட தண்டினின், மீனவர் ஐவரும்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலும் நீ! 70

' ''போரின்மேல் தண்டு எடுக்க, புறக்கிடும்
சேரர் வார்த்தை செவிப்பட்டது இல்லையோ? 71

' ''வேலை கொண்டு விழிஞம் அழித்ததும்,
சாலை கொண்டதும், தண்டு கொண்டே அன்றோ? 72

'''மாறுபட்டு எழு தண்டு எழ, வத்தவர்-
ஏறு பட்டதும் இம் முறையே அன்றோ? 73

'''தளத்தொடும் பொரு தண்டு எழ, பண்டு ஓர் நாள்,
அளத்தி பட்டது அறிந்திலை,—ஐய!—நீ? 74

'''தண்ட நாயகர் தாக்கும் நவிலையில்,
கொண்டது ஆயிரம் குஞ்சரம் அல்லவோ? 75

'''உழந்து தாம் உடை மண்டலம் தண்டினல்
இழந்த வேந்தர் எனையர் என்று எண்ணுகேன்! 76

'''கண்டுகாண் உன் புய வலி, நீயும்; அத்
தண்டு கொண்டு, அவன் சக்கரம் வந்ததே! 77

'''இன்று சீறினும், நாளை அச் சேனை முன்
நின்ற போழ்தினில், என்னை நினைத்தியால்!'' 78

அனந்தபன்மன் அமைச்சனது உரையை இகழ்ந்து பேசி, சேனைகளுக்குப்
போர் புரியக் கட்டளையிடுதல்

'என்று இவை உரைத்தலும், ''எனக்கு எதிர் உரைக்க, இமை-
யோர்களும் நடுங்குவர்; புயக்
குன்று இவை செருத் தொழில் பெருது, நெடு நாள் மெலிவு
கொண்டபடி, கண்டும் இலையோ? 79

'''பிழைக்க உரைசெய்தனை; பிழைத்தனை; எனக்கு உறுதி
பேசுவது வாசி கெடவோ?
முழைக்கண், இள வாள் அரி முகத்து, ''எளிது!'' என, களிறு
முட்டி எதிர் கிட்டி வருமோ? 80

'''என்னுடைய தோள் வலியும், என்னுடைய வாள் வலியும்,
யாதும், அறியாது, பிறர்போல்,
நின்னுடைய பேதைமையினல், உரைசெய்தாய், இது;
நினைப்பு அளவில் வெல்ல அரிதோ! 81

'''வேழம், இரதம், புரவி, வெம் படைஞர், என்று இனைய
நம் படை விரைந்து கடுக,
சோழ குல துங்கன் விட வந்து விடு தண்டின் எதிர்
சென்று, அமர் தொடங்குக!'' எனவே— 82

'''பண்ணுக, வயக் களிறு! பண்ணுக, வயப் புரவி!
பண்ணுக, கணிப்பு இல் பல தேர்!
நண்ணுக, படைச் செருநர்! நண்ணுக, செருக்களம்—
நமக்கு இகல் கிடைத்தது!'' எனவே— 83

கலிங்கப் படைகளின் எழுச்சி

'கலிங்கம் அவை ஏழினும் எழுந்தது ஒரு பேர் ஒலி,
கறங்கு கடல் ஏழும், உடனே,
மலங்கி எழு பேர் ஒலி எனத் திசை திகைப்புற,
வரும் தொனி எழுந்த பொழுதே, 84

'தொளை முக மதமலை அதிர்வன, தொடு கடல்
பருகிய முகில் எனவே;
வளை முக நுரை உக வரு பரி, கடலிடை
மறி திரை நிரை எனவே; 85

'இடை இடை அரசர்கள் இடு குடை கவரிகள்
இவை கடல் நுரை எனவே;
மிடை கொடி பிறழ்வன மறி கடல் அடையவும்
மிளர்வன கயல் எனவே; 86

'அலகிஞெடு அலகுகள் கலகல எனும் ஒலி
அலை திரை ஒலி எனவே;
''உலகுகள் பருகுவது ஒரு கடல் இது!'' என
உடலிய படை எழவே; 87

'விசை பெற விடு பரி இரதமும் மறிகடல்
மிசை விடு கலம் எனவே;
இசை பெற, உயிரையும் இகழ்தரும் இளையவர்
எறி சுறவு இனம் எனவே; 88

'விடவிகள் மொடுமொடு விசைபட முறிபட,
எறிபட, நெறிபடவே;
அடவிகள் பொடிபட, அருவிகள் அனல்பட,
அரு வரை துகள் படவே; 89

'அறை கழல் இளையவர் முறுகிய சின அழல்-
அது வட அனல் எனவே;
முறை முறை முரசுகள் மொகுமொகு அதிர்வன,
முதிர் கடல் அதிர்வு எனவே; 90

'ஒருவர்தம் உடலினில் ஒருவர்தம் உடல்புக,
உறுவது ஓர் படி உறவே;
'வெருவர மிடை படை, நடு ஒரு வெளி அற,
விழி இட அரிது எனவே; 91

'வெளி அரிது என, எதிர் மிடை படை மனுபரன்
விடு படை அதன் எதிரே,
''எளிதினின் இரை பெறு புலி என வலியினொடு
எடும், எடும், எடும்!'' எனவே— 92

கலிங்கர் படைக்கும் சோழர் படைக்கும் நிகழ்ந்த கடும் போர்

'''எடும், எடும், எடும்!'' என எடுத்தது ஓர்
இகல் ஒலி கடல் ஒலி இகக்கவே;
''விடு, விடு, விடு, பரி; கரிக் குழாம்
விடும், விடும்!'' எனும் ஒலி மிகைக்கவே; 93

'வெருவர வரி சிலை தெறித்த நாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே;
செருவிடை இளையவர் தெழித்தது ஓர்
தெழி உலகுகள் செவிடு எடுக்கவே; 94

'எறி கடலொடு கடல் கிடைத்தபோல்,
இரு படைகளும் எதிர் கிடைக்கவே;
மறி திரையொடு திரை மலைத்தபோல்,
வரு பரியொடு பரி மலைக்கவே; 95

'கன வரையொடு வரை முனைத்தபோல்,
கட கரியொடு கரி முனைக்கவே;
இன முகில் முகிலொடும் எதிர்த்தபோல்,
இரதமொடு இரதமும் எதிர்க்கவே; 96

'பொரு புலி புலியொடு சிலைத்தபோல்,
பொரு படரொடு படர் சிலைக்கவே;
அரியினொடு அரிஇனம் அடர்ப்பபோல்,
அரசரும் அரசரும் அடர்க்கவே; 97

'விளை கனல் விழிகளின் முளைக்கவே,
மினல் ஒளி கனலிடை பிறக்கவே;
வளை சிலை உரும் என இடிக்கவே,
வடி கணை நெடு மழை சிறக்கவே; 98

'குருதியின் நதி வெளி பரக்கவே,
குடை இனம் நுரை என மிதிக்கவே;
கரி துணிபடும் உடல் அடுக்கியே,
கரை என இரு புடை கிடக்கவே; 99

'மருப்பொடு மருப்பு எதிர், பொருப்பு இவை என, பொரு
மதக் கரி மருப்பினிடையே,
நெருப்பொடு நெருப்பு எதிர் சுடர்ப் பொறி தெறித்து எழ,
நிழல் கொடி தழல் கதுவவே; 100

'நிழல் கொடி தழல் கதுவலின், கடிது ஒழித்த அவை
நினைப்பவர் நினைப்பதன் முனே,
அழல் படு புகைக் கொடி எடுத்தன, புதுக் கொடி
அனைத்தினும் நிரைத்தது எனவே; 101

'இடத்திடை வலத்திடை இருத்திய துணைக் கரம்
நிகர்த்தன—அடுத்த கரியின்
கடத்து எழு மதத்திடை மடுத்தன, சிறப்பொடு
கறுத்தன, அவற்றின் எயிறே. 102

'எயிறுகளுடைய பொருப்பை வலித்து இடை
எதிர் எதிர் இரு பணை இட்டு முறுக்கிய
கயிறுகள் இவை என, ஒத்த கடக் கரி
கரமொடு கரம் எதிர் தெற்றி வலிக்கவே; 103

'முடுகிய பவன பதத்தில், உகக்கடை
முடிவினில், உலகம் உணச் சுடர் விட்டு எழு
கடுகிய வட அனலத்தினை வைத்தது,
களம் உறு துரக கணத்தின் முகத்திலே; 104

'களம் உறு துரக கணத்தின் முகத்து எதிர்,
கறுவிலர் சிலர் கலவித்தலை, நித்தில
இள முலை எதிர் பொரும் அப்பொழுது இப்பொழுது
என, எதிர் கரியின் மருப்பு எதிர் நிற்பரே. 105

'எதிர் பொரு கரியின் மருப்பை உரத்தினில்
இற எறி படையின் இறுத்து, மிறைத்து எழு
சதுரர்தம் மணி அகலத்து மருப்பு அவை
சயமகள் களப முலைக் குறி ஒக்குமே. 106

'சயமகள் களப முலைக்கு அணியத் தகு
தனி வடம் இவை என, மத்தக முத்தினை
அயம் எதிர் கடவி, மதக் கரி வெட்டினர்,
அலை படை நிரைகள் களத்து நிரைக்கவே. 107

'அலை படை நிரைகள் நிரைத்த செருக் களம்,
அழல் புரி கலம் என, ஒப்பில விற்படை
தலை பொர, எரியும் நெருப்பினின் மற்றது
தழல் படு கழை வனம் ஒக்கினும் ஒக்குமே. 108

'தழல் படு கழை வனம் எப்படி, அப்படி
சடசட தமரம் எழப் பகழிப் படை,
அழல் படு புகை பொழியப் பொழியச் சில
அடு சிலை பகழி தொடுத்து வலிப்பரே. 109

'அடு சிலை பகழி தொடுத்து விடப் புகும்
அளவினில், அயம் எதிர் விட்டவர் வெட்டின
உடல் சில இரு துணி பட்டன; பட்டபின்,
ஒரு துணி கருதும் இலக்கை அழிக்குமே. 110

'ஒரு துணி கருதும் இலக்கை அழித்து, எழ,
உருவிய பிறைமுக அப் பகழித் தலை,
'அரிது அரிது இதுவும்!' என, பரி உய்ப்பவர்
அடியொடு முடிகள் துணித்து விழுத்துமே. 111

'அடியொடு முடிகள் துணித்து விழப் புகும்
அளவு, அரி தொடை அகலத்தொடு அணைத்தனர்;
நெடியன சில சரம் அப்படி பெற்றவர்
நிறை சரம் நிமிர விட, துணி உற்றவே. 112

'நிறை சரம் நிமிர விடத் துணியுற்றவர்,
நெறியினை ஓடியெறிகிற்பவர் ஒத்து, எதிர்
அறை கழல் விருதர் செருக்கு அற வெட்டலின்,
அவர் உடல் இரு வகிர் பட்டன, முட்டவே. 113

'விடுத்த வீரர் ஆயுதங்கள் மேல் விழாமலே நிரைத்து,
எடுத்த வேலிபோல், கலிங்கர் வட்டணங்கள் இட்டவே! 114

'இட்ட வட்டணங்கள்மேல் எறிந்த வேல் திறந்த வாய்,
வட்டம் இட்ட நீள் மதிற்கு வைத்த நூழை ஒக்குமே! 115

'கலக்கம் அற்ற வீரர் வாள், கலந்த சூரர் கைத்தலத்து
உலக்கை உச்சி தைத்த போது, உழும் கலப்பை ஒக்குமே! 116

'மத்த யானையின் கரம் சுருண்டு வீழ, வன் சரம்
தைத்த போழ்தின், அக் கரங்கள் சக்கரங்கள் ஒக்குமே! 117

'வெங் கயத்தின் மத்தகத்தின் வீழும் முத்து, வீர மா
மங்கையர்க்கு மங்கலப் பொரிச் சொரிந்தது ஒக்குமே! 118

'மறிந்த கேடகம் கிடப்ப, மைந்தர் துஞ்சி வைகி வேர்
பறிந்த தேரின் நேமியோடு பார் கிடப்பது ஒக்குமே! 119

'களித்த வீரர் விட்ட நேமி கண்டு, வீசு தண்டிடைக்
குளித்த போழ்து, கைப்பிடித்த கூர் மழுக்கள் ஒக்குமே! 120

'கவந்தம் ஆட முன்பு தம் களிப்பொடு ஆடு பேய்இனம்,
நிவந்த ஆடல் ஆட்டுவிக்கும் நித்தகாரர் ஒக்குமே! 121

'ஒட்டகங்கள், யானை, வானில் உய்த்த மா, அழிந்த போர்
விட்டு அகன்று போகிலாது, மீள்வ போலும் மீளுமே. 122

'பிறங்கு சோரி வாரியில் பிளிற்றி வீழ் களிற்றினம்,
கறங்கு வேலை நீர் உணக் கவிழ்ந்த மேகம் ஒக்குமே! 123

'வாளில் வெட்டி வாரணக் கை தோளில் இட்ட மைந்தர்தாம்,
தோளில் இட்டு நீர் விடும் துருத்தியாளர் ஒப்பரே! 124

'நேர் முனையில் தொடுத்த பகழிகள்
நேர் வளை வில் சுழற்றும் அளவினில்,
மார்பிடையில் குளித்த பகழியை
வார் சிலையில் தொடுத்து விடுவரே. 125

'அசைய உரத்து அழுத்தி, இவுளியை
அடு சவளத்து எடுத்த பொழுது, அவை
விசைய மகட்கு எடுத்த கொடி என,
விருதர் களத்து எடுத்து வருவரே. 126

'இரு தொடை அற்று இருக்கும் மறவர்கள்,
எதிர் பொரு கைக் களிற்றின் வலி கெட,
ஒரு தொடையைச் சுழற்றி எறிவர்கள்;
ஒரு தொடை இட்டு வைப்பர், எறியவே. 127

'இருவர் உரத்தின் உற்ற சுரிகையின்
எதிர் எதிர் புக்கு, இமைக்கும் அளவினில்
ஒருவர் எனக் கிடைத்த பொழுதினில்,
உபய பலத்து எடுத்தது, அரவமே. 128

'பொருநர்கள் சிலர்தம் உரத்தினில் கவிழ்
புகர்முகம்மிசை அடியிட்டு, அதின் பகை
விருதரை அரிவர், சிரத்தை; அச் சிரம்
விழு பொழுது, ''அறை!'' எனும், அக் களிற்றையே. 129

'விடு படை பெறுகிலர், மற்று இனிச் சிலர்
விரை பரி விழ எறிதற்கு; முற்பட
அடு கரி நுதல் பட விட்ட கைப் படை-
அதனை ஓர் நொடி வரையில் பறிப்பரே. 130

'அமர் புரி தமது அகலத்திடைக் கவிழ்
அடு கரி நுதலில் அடிப்பர்; ''இக் களிறு
எமது'' என, இரு கண் விழிக்க, ''உட்கினர்''
என விடுகிலர், படைஞர்க்கு வெட்கியே. 131

### கருணாகரன் செருவில் தன் யானையை முந்திச் செலுத்துதல்

'அலகு இல் செரு முதிர் போதில், வண்டையர்
அரசன், அரசர்கள் நாதன் மந்திரி,
உலகு புகழ் கருணாகரன், தனது
ஒரு கை இரு பணை வேழம் உந்தவே, 132

### அப்பொழுது இரு திறச் சேனைகளும் ஒருமுகமாகப் போருக்கு முந்துதல்

'உபய பலமும் விடாது, வெஞ் சமம்
உடலு பொழுதினில், வாகை முன் கொள
அபயன் விடு படை, ஏழ் கலிங்கமும்,
அடைய ஒரு முகம் ஆகி முந்தவே, 133

'அணிகள் ஒரு முகமாக உந்தின;
அமரர் அமரது காண முந்தினர்;
துணிகள் பட மதமா முறிந்தன;
துரக நிரையொடு தேர் முறிந்தவே. 134

'விருதர் இரு துணி பார் நிறைந்தன;
விடர்கள் தலை, மலையாய் நெளிந்தன;
குருதி குரை கடல்போல் பரந்தன;
குடர்கள் குருதியின்மேல் மிதந்தவே. 135

'கசைகள் கருவிகளோடு சிந்தின;
கழுகு நரியொடு காகம் உண்டன;
திசைகள் திசைமலேயோடு அடர்ந்தன;
திமிலகுமிலம் எலாம் விளேந்தவே! 136

கலிங்க மன்னன் போருக்கு ஆற்ருது ஒதுங்கி மறைதல்

' ''புரசை மதமலே ஆயிரம் கொடு
பொருவம்'' என வரும் ஏழ் கலிங்கர்தம்
அரசன் உரைசெய்த ஆண்மையும் கெட,
அமரில் எதிர் விழியாது, ஒதுங்கியே, 137

' ''அறியும் முழைகளிலோ, பதுங்கியது?
அரிய பிலனிடையோ, மறைந்தது?
செறியும் அடவியிலோ, கரந்தது?
தெரிய அரியது!'' எனு அடங்கவே— 138

அடுத்துக் கலிங்க வீரர் தோற்ருேடுதல்

' ''எதுகொல் இது! இது மாயை ஒன்றுகொல்!
எரிகொல்! மறலிகொல்! ஊழியின் கடை-
அதுகொல்!'' என அலரு இரிந்தனர்—
அலதி குலதியொடு ஏழ் கலிங்கரே. 139

'வழிவர் சிலர்; கடல் பாய்வர்; வெங் கரி
மறைவர் சிலர்; வழி தேடி வன் பிலம்
இழிவர் சிலர்; சிலர் தூறு மண்டுவர்;—
இருவர் ஒரு வழி போகல் இன்றியே! 140

'ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்;
உடலின் நிழலினே, ஓட, அஞ்சினர்;
''அருவர்! அருவர்!'' எனு இறைஞ்சினர்,
''அபயம்! அபயம்!'' எனு நடுங்கியே. 141

' ''மழைகள் அதிர்வனபோல் அதிர்ந்து எழும்,
வளவன் விடு படை வேழம்'' என்று, இருள்
முழைகள் நுழைவர்கள், ''போரில் இன்று நம்
முதுகு செயும் உபகாரம்'' என்பரே. 142

'ஒரு கலிங்கம் ஒருவன் அழித்த நாள்,
ஒரு கலிங்கம் எழுவர் உடுத்ததே. 143

### கலிங்கர் படையிலுள்ள யானை, குதிரை, முதலியவற்றைச் சோழன் வீரர் கவர்தல்

'அப்படிக் கலிங்கர் ஓட, அடர்த்து எறி சேனை வீரர்
கைப்படு களிறும் மாவும் கணித்து உரைப்பவர்கள் யாரே? 144

'புண்தொறும் குருதி பாய, பொழிதரு கடமும் பாய,
வண்டொடும் பருந்தினோடும் வளைப்புண்ட களிறு அநேகம். 145

'ஒட்டு அறப் பட்ட போரில், ஊர்பவர் தம்மை வீசி,
கட்டு அறுத்தவர்போல் நின்று, கட்டுண்ட களிறு அநேகம். 146

'வரை, சில புலிகளோடு, வந்து கட்டுண்டவேபோல்,
அரைசரும் தாமும் கட்டுண்டு அகப்பட்ட களிறு அநேகம். 147

'நடை வயப் பரி, இரதம், ஒட்டகம்,
நவ நிதிக்குவை, மகளிர், என்று
அடைய அப்பொழுது அவர்கள் கைக்கொளும்
அவை கணிப்பதும் அருமையே. 148

### ஓடிய அனந்தபன்மன் இருந்த இடத்தை அறியுமாறு கருணாகரன் பணித்தல்

'இவை கவர்ந்த பின், ''எழு கலிங்கர்தம்
இறையையும் கொடு பெயர்தும்!'' என்று,
''அவன் இருந்துழி அறிக!'' என்றனன்—
அபயன் மந்திரி முதல்வனே. 149

### ஒற்றர் கலிங்கர் படை மறைந்திருந்த மலையைக் கண்டு வந்து செய்தி கூறுதல்

'உரைகள் பிற்படும் அளவில், ஒற்றர்கள்
ஒலி கடற்படை கடிது போய்,
வரைகளின் புடை தடவி, அப்படி
வனம் இலைப் புரை தடவியே, 150

' ''சுவடு பெற்றிலம், அவனை; மற்றொரு
சுவடு பெற்றனம்; ஒரு மலைக்
குவடு பற்றியது அவன் அடல் படை;
அது குணிப்பு அரிது'' எனலுமே, 151

### சோழன் படை சென்று, அத்தமன வேளையில் அந்த மலையை வளைந்து கொள்ளுதல்

' "எக் குவடும், எக் கடலும், எந்தக் காடும்,
இனிக் கலிங்கர்க்கு அரண் ஆவது?" என்றே, நாளும்,
அக் குவடும் அக் கடலும் வளைந்து, வெய்யோன்
அத்தமனக் குவடு அணையும் அளவில் சென்றே, 152

'தோலாத களிற்று அபயன், வேட்டைப் பன்றி
தொழு அடைத்து, தொழுஅதனைக் காப்பார் போல,
வேலாலும் வில்லாலும் வேலி கோலி,
வெற்புஅதனை விடியளவும் காத்து நின்றே, 153

### விடியற்காலையில் போர் தொடங்க, கலிங்கவீரர் மாறு வேடத்துடன் தப்பி ஓடுதல்

' "செம் மலையாய் ஒளி படைத்தது யாதோ?" என்றும்,
"செங் கதிரோன் உதயம் செய்து, உதயம் என்னும்
அம் மலையோ இம் மலையும்!" என்ன, தெவ்வர்
அழி குருதி நதி பரக்க, அறுக்கும் போழ்தில், 154

'வரைக் கலிங்கர் தமைச் சேர மாசை ஏற்றி,
வன் தூறு பறித்து மயிர்க் குறையும் வாங்கி,
அரைக் கலிங்கம் உரிப்புண்ட கலிங்கர் எல்லாம்,
"அமணர்" எனப் பிழைத்தாரும் அநேகர், ஆங்கே. 155

'வேடத்தால் குறையாது, முந்நூல் ஆக
வெஞ் சிலை நாண் மடித்து இட்டு, "விதியால், கங்கை
ஆடப் போந்து அகப்பட்டேம்; காத்தோம்பு!" என்று என்று,
அவிதா விட்டு உயிர் பிழைத்தார் அநேகர், ஆங்கே. 156

'குறியாகக் குருதி நீர்க் கோடி ஆடை
கொண்டு உடுத்து, போர்த்து, தம் குஞ்சி முண்டித்து,
"அறியீரோ, சாக்கியரை உடை கண்டால்?" என்று,
அப்பிரமண்ணியம் இடுவார் அநேகர், ஆங்கே. 157

' "சேனை மடி களம் கண்டேம்; திகைத்து நின்றேம்;
தெலுங்கரேம்!" என்று, சிலைக் கலிங்கர் தங்கள்
ஆனை மணியினைத் தாளம் பிடித்துப் பாடி,
அடிப் பாணர் எனப் பிழைத்தார் அநேகர், ஆங்கே. 158

'இவர்கள்மேல் இனி ஒருவர் பிழைத்தாரில்லை;
எழு கலிங்கத்து ஓவியர்கள் எழுதி வைத்த
சுவர்கள்மேல் உடல் அன்றி, உடல்கள் எல்லாம்
தொடர்ந்து பிடித்து அறுத்தார், முன் அடைய, ஆங்கே. 159

'கடற் கலிங்கம் எறிந்து, சயத் தம்பம் நாட்டி,
கட கரியும் குவி தனமும் கவர்ந்து, தெய்வச்
சுடர்க் கதிர் வாள் அபயன் அடி அருளினோடும்
சூடினான்—வண்டையர்கோன் தொண்டை மானே. 160

## 12. களம் காட்டியது

'தேவாசுர, ராமாயண, மா பாரதம், உள என்று
ஓவா உரை ஓயும்படி உளது, அப் பொரு களமே. 1

கலிங்கப்பேய் களம் காணுமாறு தேவியை வேண்டுதல்

'காலக் களம்அது கண்டருள்—இறைவீ!—கடிது' எனவே,
ஆலக் களம் உடையான் மகிழ் அமுது அக் களம் அணுகி, 2

தேவி செருக்களம் கண்டு வியப்புக்கொள்ளுதல்

'என்னே, ஒரு செரு வெங் களம்!' எனவே அதிசயம் உற்று,
அந் நேரிழை அலகைக் கணம்அவை கண்டிட, மொழியும்: 3

செருக்களத்தின் சிறப்பைத் தேவி பேய்களுக்கு எடுத்துரைத்தல்

'உடலின்மேல் பல காயம் சொரிந்து, பின் கால்
உடன் பதைப்ப, உதிரத்தே ஒழுகும் யானை,
கடலின்மேல் கலம் தொடரப் பின்னே செல்லும்,
கலம் போன்று தோன்றுவன, காண்மின், காண்மின்! 4

'நெடுங் குதிரை மிசைக் கலனை சரியப் பாய்ந்து,
நிணச் சேற்றில் கால் குளிப்ப நிரையே நின்று,
படும் குருதிக் கடும் புனலை அடைக்கப் பாய்ந்த
பல குதிரைத் தறி போன்ற பரிசு காண்மின்! 5

'விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்ண,
மேன்மேலும் முகம் மலரும் மேலோர் போல,
பருந்துஇனமும் கழுகுஇனமும் தாமே உண்ண,
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின், பார்மின்! 6

'சாம் அளவும் பிறர்க்கு உதவாதவரை நச்சிச்
சாருநர்போல், வீரர் உடல் தரிக்கும் ஆவி
போம் அளவும் அவர் அருகே இருந்து விட்டுப்
போகாத நரிக் குலத்தின் புணர்ச்சி காண்மின்! 7

'மா மழைபோல் பொழிகின்ற தான வாரி
மறுத்து விழும் கட களிற்றை வெறுத்து, வானோர்
பூ மழை மேல் பாய்ந்து, எழுந்து, நிரந்த வண்டு
பொருட்பெண்டிர் போன்றமையும் காண்மின், காண்மின்! 8

'சாய்ந்து விழும் கட களிற்றினுடனே சாய்ந்து,
தடங் குருதி மிசைப் படியும் கொடிகள், தங்கள்
காந்தருடன் கனல் அமளிஅதன்மேல் வைகும்
கற்புடை மாதரை ஒத்தல் காண்மின், காண்மின்! 9

'தம் கணவருடன் தாமும் போக என்றே
சாதகரைக் கேட்பாரே, தடவிப் பார்ப்பார்,
''எம் கணவர் கிடந்த இடம் எங்கே?'' என்று என்று,
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்! 10

'வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி,
''மணி அதரத்து ஏதேனும் வடு உண்டாயோ?
நீ மடித்துக் கிடந்தது?'' எனப் புலவி கூர்ந்து,
நின்று ஆவி சோர்வாளைக் காண்மின், காண்மின்! 11

'தரைமகளும் தன் கொழுநன் உடலம்தன்னைத்
தாங்காமல் தன் கரத்தால் தாங்கி, விண் நாட்டு
அர மகளிர் அவ் உயிரைப் புணராமுன்னம்,
ஆவி ஒக்க விடுவாளைக் காண்மின், காண்மின்! 12

' ''பொரு தடக் கை வாள் எங்கே? மணி மார்பு எங்கே?
போர் முகத்தில் எவர் வரினும், புறங்கொடாத
பரு வயிரத் தோள் எங்கே, எங்கே?'' என்று,
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்! 13

‘ஆடல் துரங்கம் பிடித்து, ஆளை ஆளோடு
அடித்துப் புடைத்து, புணீர்
ஓடித் தெறிக்க, கருங் கொண்டல் செங் கொண்டல்
ஒக்கின்ற காண்மின்களோ! 14

‘நெருங்கு ஆகவச் செங் களத்தே தயங்கும்
நிணப் போர்வை மூடிக் கொள,
கருங் காகம் வெண் காகமாய் நின்றவா, முன்பு
காணாத, காண்மின்களோ! 15

‘மிடையுற்ற தேர் மொட்டு மொட்டு ஒக்க, வெஞ் சோரி
நீர் ஒக்க, வீழ் தொங்கல் பா-
சடை ஒக்க, அடு செங் களம் பங்கயப் பொய்கை
ஆம் ஆறு காண்மின்களோ! 16

‘வெயில்-தாரை வேல் சூழவும் தைக்க, மண்மேல்
விழா வீரர்—வேழம்பர் தம்
கயிற்றால் இழுப்புண்டு, சாயாது நிற்கும்
கழாய் ஒத்தல் காண்மின்களோ! 17

‘இருப்புக் கவந்தத்தின்மீது ஏறலும், சூரர்
எஃகம் புதைக்க, பறை
பரப்பிச் சுழன்று இங்கு ஓர் பாறு ஆட, ஈது ஓர்
பருந்து ஆடல் காண்மின்களோ! 18

‘வரும் சேனை தம் சேனை மேல் வந்துறாமே, வில்
வாள் வீரர் வாணாள் உக,
கருஞ் சேவகம் செய்து, செஞ்சோறு அறச் செய்த
கைம்மாறு காண்மின்களோ! 19

‘யானைப் படைச் சூரர் நேர் ஆன போழ்து, அற்று
எழுந்து ஆடுகின்றார் தலை—
மானச் சயப் பாவை விட்டு ஆடும் அம்மானை
வட்டு ஒத்தல் காண்மின்களோ! 20

‘எதிர் கொளும் சுரர் விமானங்களில் சுரர்கள் ஆய்
ஏறும் மானவர்கள்தாம் எண்ணுதற்கு அருமையின்,
கதிர் விசும்புஅதனிலே இதனிலும் பெரியது ஓர்
காளையம் விளையுமா காண்மினோ, காண்மினோ! 21

'அவர் இபம் சொரி மதம் கழி எனப் புக மடுத்து,
அவர் பரித் திரை அலைத்து, அமர் செய் காலிங்கர்தம்
கவரி வெண் நுரை நிரைத்து, அவர் உடல் குருதியின்
கடல் பரந்து ஓடுமா காண்மினோ, காண்மினோ! 22

'புவி புரந்து அருள் செயும் சயதரன், ஒரு முறை,
புணரிமேல் அணைபடப் பொரு இல் வில் குனிதலின்,
கவி குலம் கடலிடைச் சொரி பெருங் கிரி என,
கரிகளின் பிணம் இதில் காண்மினோ, காண்மினோ! 23

'உற்ற வாய் அம்பு தம் பரிசையும் கருவியும்
உருவி, மார்பு அகலமும் உருவி, வீழ் செருநர், 'வில்
கற்றவா, ஒருவன்! வில் கற்றவா!' என்று, தம்
கைம் மறித்தவரையும் காண்மினோ, காண்மினோ! 24

'விண்ணின் மொய்த்து எழு விமானங்களில் சுரர்கள் ஆய்
மீது போம் உயிர்களே அன்றியே, இன்று தம்
கண் இமைப்பு ஒழியவே முகம் மலர்ந்து, உடல்களும்
கடவுளோர் போலுமா காண்மினோ, காண்மினோ! 25

'பிறைப் பெரும் பணை வேழம் முன்னொடு
பின் துணிந்து தரைப் படும்
குறைத் தலைத் துணி கொல்லன் எஃகு எறி
கூடம் ஒத்தமை காண்மினோ! 26

'வாயினில் புகு வேல்கள் பற்று
வலக் கையோடு நிலத்திடைச்
சாயும் மற்று அவர் காளம் ஊதிகள்-
தம்மை ஒத்தமை காண்மினோ! 27

'பட ஊன்று நெடுங் குந்தம் மார்பின்நின்றும்
பறித்து, அதனை நிலத்து ஊன்றி, தேர்மேல் நிற்பார்—
படவு ஊன்றி விடும் தொழிலோர் என்ன, முன்னம்
பசுங் குருதி நீர்த் தோன்றும் பரிசு காண்மின்! 28

'வாய் அகல் அம்பு அரத்தமொடு நிணம் கொண்டு ஓட,
மற்று அதனை, வள் உகிர் வான் பருந்து, கொண்டல்
வாய் அகல் அம்பரத்தினிடைக் கௌவி, வல் வாய்
வகிர்ப்பட்டு நிலம் பட்ட வண்ணம் காண்மின்! 29

'சாதுரங்கத் தலைவனைப் போர்க் களத்தில் வந்த
தழை வயிற்றுப் பூதம்தான் அருந்தி, மிக்க
சா துரங்கம் தலை சுமந்து, கமஞ் சூல் கொண்டு
தனிப் படும் கார் என வரும் அத் தன்மை காண்மின்! 30

'முது குவடு இப்படி இருக்கும் என்ன நிற்கும்
முனைக் களிற்றோர், செருக் களத்து, ''முந்து தங்கள்
முதுகு வடுப் படும்'' என்ற வடுவை அஞ்சி,
முன்னம் வடுப் பட்டாரை இன்னம் காண்மின்! 31

# 13. கூழ் அடுதல்

தேவி கூழ் அடுமாறு கூளிகளுக்குப் பணித்தல்

'களம் அடையக் காட்டுதற்கு முடிவது அன்று;
கவிழும் மதக் கரி சொரியக் குமிழி விட்டுக்
குளம் மடை விட்டது போலும் குருதி ஆடி,
கூழ் அடும்!' என்று அணங்கு அருள, கும்பிட்டு ஆங்கே, 1

பேய்கள் கூழ் அடுதல்

'குறு மோடீ! நெடு நிணமாலாய்! குடை கலதீ! கூர் எயிறீ! நீலீ!
மறி மாடீ! குதிர் வயிறீ! கூழ் அட, வாரீர்! கூழ் அட, வாரீரே! 2

பல் துலக்கி, நா வழித்து, நீராடுதல்

'பறிந்த மருப்பின் வெண் கோலால், பல்லை விளக்கிக் கொள்ளீரே!
மறிந்த களிற்றின் பழு எலும்பை வாங்கி, நாக்கை வழியீரே! 3

'வாய் அம்புகளாம் உகிர் கொள்ளி வாங்கி உகிரை வாங்கீரே!
பாயும் களிற்றின் மத தயிலம் பாயப் பாய வாரீரே! 4

'எண்ணெய் போக, வெண் மூளை என்னும் களியால் மயிர் குழப்பி,
பண்ணையாகக் குருதி மடுப் பாய்ந்து நீந்தி, ஆடீரே! 5

'குருதிக் குட்டம் அத்தனையும் கோலும் வேலும் குந்தமுமே;
கருது இக் கட்டம் மாட்டாதீர், கரைக்கே இருந்து குளியீரே! 6

ஆடை அணி புனைதல்

'ஆழ்ந்த குருதி மடு நீந்தி, அங்கே திளையாது இங்கு ஏறி,
வீழ்ந்த கலிங்கர் நிணக் கலிங்கம் விரித்து விரித்துப் புனையீரே! 7

'மதம் கொள் கரியின் கோளகையை மணிச் சூடகமாச் செறியீரே!
பதம் கொள் புரவிப் படி தரளப் பொன் பாடகமாப் புனையீரே! 8

'ஈண்டும் செருவில் பொரு வீரர் எறியும் பாராவளை எடுத்து,
வேண்டும் அளவும் வாய் நெகிழ்த்து, விடு கம்பிகளாப் புனையீரே! 9

'பணைத்த பனை வெங் கரிக் கரத்தால், பரிய கரு நாண் கட்டீரே!
இணைத்த முரசம் வாள் காம்பு இட்டு, இரட்டை வாளி ஏற்றீரே! 10

'பட்ட புரவிக் கவி குரத்தால், பாகு வலயம் சாத்தீரே!
இட்ட சுரி சங்கு எடுத்துக் கோத்து, ஏகாவலியும் சாத்தீரே! 11

'பொரு சின வீரர் கண் மணியும் புனை போதக மத்தக முத்தும்,
வரிசை அறிந்து, மயிர்க் கோத்து, வன்ன சரங்கள் அணியீரே! 12

'கொள்ளும் எனைப் பல கோலம் மேன்மேல் கொண்டிட, வேளையும் மீதூர,
உள்ளும் புறம்பும் வெதும்பும் காண்; உண்பதனுக்கு ஒருப்படுவீரே! 13

கூழ் சமைத்த வகை

அடுப்பில் பானை ஏற்றி உலை நீர் வைத்தல்

'மா காய மதமலையின் பிணமலைமேல், வன் கழுகின் சிறகால் செய்த
ஆகாய மேற்கட்டி அதன்கீழே, அடுக்களை கொண்டு, அடுமின் அம்மா! 14

'பொழி மதத்தால் நிலம் மெழுகி, பொடிந்து உதிர்ந்த
பொடித் தரளப் பிண்டி தீட்டி,
அழி மதத்த மத்தகங்கள் அடுப்பாகக் கடுப்பாக்
கொண்டு, அடுமின் அம்மா! 15

'கொற்ற வாள் மறவர் ஓச்ச, குடரொடு தலையும் காலும்
அற்று, வீழ் ஆனைப் பானை அடுப்பினில் ஏற்றும் அம்மா! 16

'வெண் தயிரும் செந் தயிரும் விராய்க் கிடந்த
கிழான் போல, வீரர் மூளைத்
தண் தயிரினுடன் ஈரற் புளிதமும் மாத்
தாழிதொறும் தம்மின் அம்மா! 17

'கொலையினுள் படு கரிக் குழிசியுள், கூழினுக்கு
உலை என, குதிரையின் உதிரமே சொரிமினோ. 18

'துள்ளி வெங் களனில் வீழ் துரக வெண் பல் எனும்
உள்ளியும் கிள்ளி இட்டு, உகிரின் உப்பு இடுமினோ. 19

'தனி விசும்பு அடையினும், படைஞர் கண் தவிர்கிலா
முனிவு எனும் கனலை, நீர், மூள வைத்திடுமினோ! 20

'குந்தமும் பகழியும் கோல்களும் வேலும் ஆம்
இந்தனம் பல எடுத்து, இடைமடுத்து எரிமினோ. 21

தேவியையும் குலோத்துங்கனையும் புகழ்ந்து பாடிக்கொண்டு
பேய்கள் அரிசி தீட்டுதல்

'கல்லைக் கறித்துப் பல் முறிந்து கவிழ்ந்து விழுந்த கலிங்கர்தம்
பல்லைத் தகர்த்து, பழ அரிசி ஆகப் பண்ணிக் கொள்ளீரே! 22

'சுவைக்கும் முடிவு இல் கூழினுக்குச் சொரியும் அரிசி வரி அறவே,
அவைக்கும் உரல்கள் என, குரல்கள் அவிந்த முரசம் கொள்ளீரே! 23

'இந்த உரற்கண் இவ் அரிசி எல்லாம் பெய்து, கொல் யானைத்
தந்த உலக்கைதனை ஓச்சி, சலுக்கு மொலுக்கு எனக் குற்றீரே!— 24

'மணம் தரு தார்ச் சயதுங்கன் எம் கோன் வாள் வலியால் நம் மெலிவு [அகல,
பிணம் தரு நாச்சியைப் பாடீரே! பெருந் திருவாட்டியைப் பாடீரே! 25

'கவன நெடும் பரி வீரதரன், காவிரி நாடுடையான், இரு தோள்
அவனி சுமந்தமை பாடீரே! அரவு தவிர்ந்தமை பாடீரே! 26

'மன்னர் புரந்தரன் வாள் அபயன் வாரணம் இங்கு மதம் படவே,
தென்னர் உடைந்தமை பாடீரே! சேரர் இரிந்தமை பாடீரே! 27

'வணங்கிய சேரர் மணி முடியும், வழுதியர் தங்கள் திரு முடியும்,
பிணங்கிய சேவடி பாடீரே! பெருமான் திருவடி பாடீரே! 28

'ஒளிறு நெடும் படை வாள் அபயற்கு உத்தர பூமியர் இட்ட திறைக்
களிறு வரும்படி பாடீரே! கட மதம் நாறுவ பாடீரே! 29

'பௌவம் அடங்க வளைந்த குடைப் பண்டித சோழன் மலர்க் கழலில்
தெவ்வர் பணிந்தமை பாடீரே! சிலை வலி, வாள் வலி, பாடீரே! 30

'எற்றைப் பகலினும், வெள்ளணி நாள், இரு நிலப் பாவை தனை நிழற்றும்
கொற்றக் குடையினைப் பாடீரே! குலோத்துங்க சோழனைப் பாடீரே! 31

'வண்டை வளம் பதி பாடீரே! மல்லையும் கச்சியும் பாடீரே!
பண்டை மயிலையும் பாடீரே! பல்லவர் தோன்றலைப் பாடீரே! 32

'காட்டிய வேழ அணி வாரி, கலிங்கப் பரணி நம் காவலன்மேல்
சூட்டிய தோன்றலைப் பாடீரே! தொண்டையர் வேந்தனைப் பாடீரே! 33

## குலோத்துங்கன் பெருங் கீர்த்தி

'இடை பார்த்துத் திறை காட்டி, இறைவன் இரு புருவத்தின்
கடை பார்த்து, தலை வணங்கும் கதிர் முடி நூறுயிரமே. 34

'முடி சூடும் முடி ஒன்றே; முதல் அபயன் எம் கோமான்
அடி சூடும் முடி எண்ணில், ஆயிரம் நூறுயிரமே. 35

'முடியினல் வழிபட்டு, மொழிந்த திறை இடா வேந்தர்
அடியினுல் மிதி பட்ட அரு வரை நூறுயிரமே. 36

'தார் வேய்ந்த புயத்து அபயன்தன் அமைச்சர் கடைத்தலையில்,
பார் வேந்தர் படுகின்ற பரிபவம் நூறுயிரமே. 37

'தாங்கு ஆரப் புயத்து அபயன் தண் அளியால் புயல் வளர்க்கும்
ஓங்கார மந்திரமும் உலப்பு இல நூறுயிரமே. 38

'போர் தாங்கும் களிற்று அபயன் புயம் இரண்டும் பார் தாங்க,
பார் தாங்கும் பரம் தவிர்ந்த பணிப் பணங்கள் ஆயிரமே. 39

'நாற் கடலைக் கவித்த குடை நரதுங்கன், அமுதம் எழ,
பாற்கடலைக் கடைந்தருளும் பணை நெடுந் தோள்ஆயிரமே. 40

'தாள் இரண்டால் நில வேந்தர் தலை தாங்கும் சய துங்கன்
தோள் இரண்டால் வாணனை முன் துணித்தன தோள் ஆயிரமே. 41

'சூழி முகக் களிற்று அபயன் தூது நடந்தருளிய நாள்,
ஆழி முதல் படை எடுத்த அணி நெடுந் தோள் ஆயிரமே.— 42

## குற்றிய அரிசியைப் புடைத்து உலையிற் பெய்தல்

'பல் அரிசியான எலாம் பழ அரிசி ஆன; இனி,
சல்லவட்டம் எனும் சுளகால் தவிடு விடப் புடையீரே! 43

'பாணிகளால் நிலம் திருத்தி, படைக் கவிங்கர் அணி பகழித்
தூணிகளே நாழிகளா, தூணி மா அளவீரே! 44

'விரல் புட்டில் இவை சிறிய; வில் கூடை பெரியன கொண்டு,
உரல் பட்ட அரிசி முகந்து, உலைதோறும் சொரியீரே! 45

'களப் பரணிக் கூழ் பொங்கி வழியாமல், கை துடுப்பா
அளப்ப அரிய குளப்புக் கால் அகப்பைகளாக் கொள்ளீரே! 46

கூழைப் பதம் பார்த்து இறக்குதல்

'வைப்புக் காணும் நமக்கு இன்று! வாரீர்! கூழை, எல்லீரும்
உப்புக் காண ஒரு துள்ளி உள்ளங்கையில் கொள்ளீரே! 47

'அழலைக் கையில் கொள்ளாமே, அடுப்பை அவித்து, கைத் துடுப்பால்,
சுழலச் சுழலப் புடை எங்கும் துழாவித் துழாவிக் கொள்ளீரே! 48

'பற்றிப் பாரீர், இக் கூழின் பதமும் சுவையும்! பண்டு உண்ட
மற்றைக் கூழின் மிக நன்று; வாரீர், இழிச்ச வாரீரே! 49

'எடுத்துக் கையில் கவிழாமே, இவுளித் துணியிட்டு, இரு மருங்கும்
அடுத்துப் பிடித்து, மெத்தெனவே அடுப்பில்நின்றும் இழிச்சீரே! 50

'''ஒரு வாய் கொண்டே இது தொலைய உண்ண ஒண்ணுது'' என்று என்று,
வெருவாநின்றீர்; ஆயிரம் வாய் வேண்டுமோ, இக் கூழ் உணவே? 51

'வெந்த இரும்பில் புகும் புனல்போல், வெந் தீப் பசியால் வெந்து எரியும்
இந்த விடம்பை நாத் தோய்க்கில், இக் கூழ் எல்லாம் சுவருதோ? 52

'பண்டு மிகும் ஓர் பரணிக் கூழ் பாரதத்தில் அறியேமோ?
உண்டும் மிகுமோ? நீர் சொன்ன உபாயம் எதுவும் செயல் நன்றே. 53

'வெம்பும் குருதிப் பேர் ஆற்றில், வேண்டும் தண்ணீர் வேழத்தின்
கும்பங்களிலே முகந்து எடுத்து, குளிர வைத்துக் கொள்ளீரே! 54

'சோரும் களிற்றின் வாலதியால் சூழ அலகிட்டு, அலை குருதி
நீரும் தெளித்து, கலம் வைக்க, நிலமும் சமைத்துக் கொள்ளீரே! 55

'போர் மண்டலிகர் கேடகத்தின் புளகச் சின்னம் பரப்பீரே!
பார் மண்டலிகர் தலை மண்டை பல மண்டைகளாக் கொள்ளீரே! 56

'அழிந்த கலிங்கர் பொன் பரிசை அவை பொன் கலமாக் கொள்ளீரே!
விழுந்த தவளக் குடை மின்னும் வெள்ளிக் கலமாக் கொள்ளீரே! 57

நிலத்தைச் சமைத்துக் கொள்ளீரே! நெடுங் கைக் களிற்றின் பணைக் [காலாம்
கலத்தில் குறையக் கொள்ளாத கலங்கள் பெருக்கிக் கொள்ளீரே! 58

'கதம் பெற்று ஆர்க்கும் செறுநர் விழிக் கனலும் நிணமும், அணங்கின் [பால்
பதம் பெற்றூர்க்கு, பகல் விளக்கும் பாவாடையுமாக் கொள்ளீரே! 59

'பரிசு படவே கலம் பரப்பி, பந்தி பந்தி பட, உங்கள்
வரிசையுடனே இருந்து உண்ண, வாரீர்; கூழை வாரீரே! 60

'கங்காபுரியின் மதில் புறத்துக் கருதார் சிரம் போய் மிக வீழ,
இங்கே தலையின் வேல் பாய்ந்த இவை மூழைகளாக் கொள்ளீரே! 61

'கிடைத்த பொழுது மணலூரில், கீழ் நாள் அட்ட பரணிக் கூழ்
படைத்துப் பயின்ற மடைப் பேய்கள்! பந்திதோறும் வாரீரே! 62

மடைப் பேய் மற்றைப் பேய்களுக்குக் கூழ் வார்த்தல்

'அவதி இல்லாச் சுவைக் கூழ் கண்டு, அங்காந்து அங்காந்து, அடிக்கடியும்
''பவதி! பிட்சாந்தேகி'' எனும் பனவப் பேய்க்கு வாரீரே! 63

'உயிரைக் கொல்லாச் சமண் பேய்கள் ஒரு போழ்து உண்ணும்; அவை [உண்ண,
மயிரைப் பார்த்து, நிணத் துகிலால் வடித்து, போத வாரீரே! 64

'முழுத்தோல் போர்க்கும் புத்தப் பேய், மூளைக் கூழை, நாக் குழற,
கழுத்தே கிட்ட, மணம் திரியாக் கஞ்சி ஆக வாரீரே.! 65

'கொய்த இறைச்சி உறுப்பு அனைத்தும் கொள்ளும் கூழை, வெள்ளாட்டின்
பைதல் இறைச்சி தின்று உலர்ந்த பார்வைப் பேய்க்கு வாரீரே! 66

'ஊண் ஆதரிக்கும் கள்ளப் பேய் ஒளித்துக் கொண்ட கலம் தடவி,
காணுது அரற்றும் குருட்டுப் பேய் கைக்கே கூழை வாரீரே! 67

'பையாப்போடு பசி காட்டி, பதலை நிறைந்த கூழ் காட்டி,
கையால் உரைக்கும் ஊமைப் பேய் கலத்தை நிறைக்க வாரீரே! 68

'''அடைத்த செவிகள் திறந்தனவால்,அடியேற்கு'' என்று, கடைவாயைத்
துடைத்து நக்கிச் சுவை காணும் சூல் பேய்க்கு இன்னும் சொரியீரே! 69

'பொல்லா ஓட்டைக் கலத்துக் கூழ் புறத்தே ஒழுக, மறித்துப் பார்த்து,
எல்லாம் கவிழ்த்து, திகைத்திருக்கும் இழுதைப் பேய்க்கு வாரீரே! 70

'துதிக்கைத் துணியைப் பல்லின்மேல் செவ்வே நிறுத்தி, ''துதிக்கையின்
நுதிக்கே கூழை வார்'' என்னும் நோக்கப் பேய்க்கு வாரீரே! 71

'தடியால் மடுத்து, கூழ் எல்லாம் தானே பருகி, தன் கணவன்
குடியான் என்னக் குலுங்கு அடிக்கும் கூத்திப் பேய்க்கு வாரீரே! 72

'வரு கூழ்ப் பரணிக் களம் கண்டு, வந்த பேயை முன் ஊட்டி,
ஒரு கூழ்ப் பரணி, நாம் இருக்கும் ஊர்க்கண் பேய்க்கு வாரீரே! 73

'இரவு கனவு கண்ட பேய்க்கு இற்றைக்கு அன்றி நாளைக்கும்
புரவி உரித் தோல் பட்டைக்கே பொதி கூழ் பொதிந்து வையீரே! 74

'இணக்கம் இல்லா நமை எல்லாம்,'எண்ணிக் கண்டேம்' என்று உரைக்கும்
கணக்கப் பேய்க்கும் அகம் களிக்க, கையால் எடுத்து வாரீரே! 75

'மென் குடர் வெள்ளை குதட்டீரே! மெல் விரல் இஞ்சி அதுக்கீரே!
முன் கை எலும்பினை மெல்லீரே! மூளையை வாரி விழுங்கீரே! 76

'அள்ளி அருகு இருந்து உண்ணீரே! அரிந்திடு தாமரை மொட்டு என்னும்
உள்ளி கறித்துக்கொண்டு உண்ணீரே! ஊதி வரன்றிக் கொண்டு
[உண்ணீரே!

'தமக்கு ஒரு வாயொடுவாய் மூன்றும் தாம் இனிதாப் படைத்துக்கொண்டு
நமக்கு ஒரு வாய் தந்த நான்முகனுர் நாணும்படி, களித்து உண்ணீரே!

'ஓடி உடல் வியர்த்து உண்ணீரே! உந்தி பறந்து இளைத்து உண்ணீரே!
ஆடி அசைந்து அசைந்து உண்ணீரே! அற்றது அற அறிந்து உண்ணீரே! 79

'கொதித்த கரியின் கும்பத்துக் குளிர்ந்த தண்ணீர்தனை மொண்டு,
பொதுத்த தொளையால் புக மடுத்து, புசித்த வாயைப் பூசீரே! 80

'பண்ணும் இவுளிச் செவிச் சுருளும், பரட்டின் பிளவும், படு கலிங்கர்
கண்ணின் மணியின் சுண்ணும்பும், கலந்து மடித்துத் தின்னீரே! 81

'பெருக்கத் தின்றீர் தாம்பூலம்; பிழைக்கச் செய்தீர்! பிழைப்பீரே—
செருக்கப் பேய்காள்!—பூதத்தின் சிரத்தின் மயிரை மோவீரே!' 82

## பேய்கள் களிப்பு மிகுதியால் கூத்தாடுதல்

என்று களித்துக் குமண்டையிட்டே, ஏப்பமிட்டு, பருத்துநின்ற
குன்று குனிப்பனபோல், களத்துக் கும்பிட்டே நடமிட்டனவே. 83

வாசி கிடக்க, கலிங்கர் ஓட, மானதன் ஏவிய சேனைவீரர்
தூசி எழுந்தமை பாடி நின்று, தூசியும் இட்டு நின்று ஆடினவே, 84

பொருகை தவிர்ந்து கலிங்கர் ஓட, போக புரந்தரன் விட்ட தண்டின்
இரு கையும் வென்றது ஓர் வென்றி பாடி, இரு கையும் வீசி நின்று
[ஆடினவே. 85

'வழுதியர் வரை முழை நுழை வடிவு இது' என,
மத கரி வயிறுகள் புக நுழைவன சில;
'எழுதிய சிலையவர் எறி கடல் விழும் அவை
இவை' என, வழி குருதியின் விழுவன சில. 86

'உருவிய சுரிகையொடு உயர் கணை விடு படை
உருள் வடிவு இது' என, உருள்வன, சில சில,
'வெருவிய அடுநர்தம் முடை வடிவு இது' என,
விரி தலை அதனொடு மறிவன, சில சில. 87

முரசு, குடை, கவரி, தொங்கல், நெடுங் கொடி,
முரலும் வரி வளை சுமந்து, நிரந்தரம்
அரசர் இடு திறை சுமந்து, 'அபயன் கழல்
அடைய, அடிகள் அருள்க!' என்பனவும் சில. 88

இனைய இனைய நடகங்கள் முடிந்தபின்,
'இரவி திரு மரபின் வந்த புரந்தரன்
அனைய அபயன், அகளங்கன், அரிந்தமன்,
அளவு இல் புகழ் புகழ்தும்!' என்று தொடங்கியே— 89

## குலோத்துங்க சோழனை வாழ்த்துதல்

உபயம் எனும் பிறப்பாளர் உள்ளிட்டு,
உரைத்த உயிர்கள் அத்தனையும்,
'அபயம்!' எனப் புகுந்து, 'அஞ்சல்!' என்ற
அபயன் தாள் இணை வாழ்த்தினவே. 90

திசையில் பல நரபாலர் முன்னே,
தெழித்து உரப்பும் சிசுபாலன் வைத
வசையைப் பொறுத்தானை வாழ்த்தினவே;
மனு குல தீபனை வாழ்த்தினவே. 91

பொன்னித் துறைவனை வாழ்த்தினவே;
பொருநைக் கணவனை வாழ்த்தினவே;
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே;
கங்கை மணாளனை வாழ்த்தினவே. 92

ஆழிகள் ஏழும் ஓர் ஆழியின் கீழ்
அடிப்பட வந்த அகலிடத்தை
ஊழிதொறு ஊழியும் காத்து அளிக்கும்
உலகு உய்ய வந்தானை வாழ்த்தினவே. 93

'பூப் பதுமத்தன் படைத்து அமைத்த
புவியை இரண்டாவதும் படைத்து,
காப்பதும் என் கடன்' என்று காத்த
கரிகால் வளவனை வாழ்த்தினவே. 94

## வாழ்த்து

யாவரும் களி சிறக்கவே! தருமம்
எங்கும் என்றும் உளதாகவே!
தேவர் இன் அருள் தழைக்கவே! முனிவர்
செய் தவப் பயன் விளைக்கவே! 95

வேத நல் நெறி பரக்கவே! அபயன்
வென்ற வெங் கலி கரக்கவே!
பூதலம் புகழ் பரக்கவே! புவி
நிலைக்கவே! புயல் சுரக்கவே! 96

# பரணி உறுப்புக்களின் அகராதி


| | | |
|---|---|---|
| அவதாரம் | ... | 33-42 |
| இந்திரசாலம் | ... | 22-25 |
| இராச பாரம்பரியம் | ... | 25-30 |
| கடவுள் வாழ்த்து | ... | 3-5 |
| கடை திறப்பு | ... | 6-12 |
| களம் காட்டியது | ... | 62-66 |
| காடு பாடியது | ... | 12-14 |
| காளிக்குக் கூளி கூறியது | ... | 42-62 |
| கூழ் அடுதல் | ... | 66-74 |
| கோயில் பாடியது | ... | 15-17 |
| தேவியைப் பாடியது | ... | 18-19 |
| பேய்களைப் பாடியது | ... | 19-21 |
| பேய் முறைப்பாடு | ... | 30-32 |

Printed by S. Viswanathan at the Central Art Press,
'Acton Lodge', 11 McNichol Road, Chetput, Madras 31.